Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை (18.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 049

# புலிகளை தோற்கடித்ததில் கடற்படையினரின் பங்கு என்ன?

## தளபதி எழுதிய புத்தகம் வெளிவந்தது

(கொழும்பு)

புலிகளை தோற்கடித்ததில் கடற்படையினரின் பங்கு எத்தகையது என்று விளக்கும் "அதிஸ் டானய" என்ற புத்தகம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் வசந்த கரன்னாகொடவினால் எழுதப்பட்ட "அதிஸ் டானய" நூல் நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க



# புலிகளின் நிதி ஈட்டம்; சுவிஸ் அரசின் தடை நீடிப்பு

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து நாட்டில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத நிதி ஈட்டம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்தும் தடைசெய்யப்பட்டிருக்கும் என்றும், விடுதலைப் புலிகளின் கறுப்புப் பணம் தொடர்பான விசாரணைகள் எதுவும் இடைநிறுத்தப்படவில்லை எனவும் சுவிட்சர்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த விடயம் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத நிதிக் கொடுக்கல் வாங்கல்கள், கப்பம் கோரல்கள் மற்றும் கறுப்புப் பண

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தோதய புலமைப்பரிசில் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு பாடசாலை மாணவர்களின் நலன் கருதி மகிந்தோதய புலமைப்பரிசில் நிதியம் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

# நட்டஈடு கிடைக்கும்

## ஏற்பாடுகள் தடல்புடல்

பிரத்தியேக செய்தி

(யாழ்ப்பாணம்)

கடந்த 2013 பெரும்போக நெற்செய்கையில் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் வறட்சி நிவாரண நிதி முழுமையாக வழங்கப்படவுள்ளது.

இதில் விவசாயிகள் எவ்வித குழப்பமும் அடையத் தேவையில்லையென யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட நெற்பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு வறட்சி காரணமாக பயிரழிவு ஏற்பட்டது. கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக பயிரழிவுக்கான ஆவணங்கள், உறுதிகள், காப்புறுதி செலுத்திய நிதி மற்றும் அழிவு விபரங்கள் தொகுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதிலிருந்து முதற்கட்டமாக 7 ஆயிரத்து 761 பேருக்கு அவர்களது வங்கிக் கணக்கு ஊடாக வறட்சி நிவாரண நிதியை வழங்கியுள்ளோம். ஏனைய வறட்சி நிவாரண நிதி கிடையாதோரும் இந்த நிதி தொடர்பில் எம்மை கோரிய வண்ணம் உள்ளனர்.

நாம் எவ்வித பாகுபாடுமின்றி வறட்சி பாதித்த அனைவருக்கும் காலம்தாழ்த்தாது வங்கியூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எனவே 2013 வறட்சி பேரழிவு பாதித்த விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தின் ஊடாக நிதி நன்மையை விரைவில் பெறுவீர்கள் என்றார் பிரதி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன்.

(மற்றுமொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

## தேர்தல் அறிவிப்பு நாளை வெளிவர வாய்ப்பு

(கொழும்பு)


ஜனாதிபதித் தேர்தல் குறித்த வர்த்தமான அறிவித்தல் நாளை வெளிவரலாம் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரம் (2 ஆம் திகதி) ஜனாதிபதித் தேர்தல் நடைபெறக் கூடிய சூழல் உருவாகியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின்

19 ஆம் பக்கம் பார்க்க

# பிரதேச சபை உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் ஒருதொகுதியினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மோட்டார் சைக்கிள்களை வழங்கி வைத்துள்ளார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் வைத்து நேற்று மோட்டார் சைக்கிள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நகர மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 45 உறுப்பினர்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 54 உறுப்பினர்களுக்கும் இதுவரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

உள்ளே...
திருத்தம் செய்யப்பட்ட புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி

# புலிகளுக்கு உதவியது எப்படி சொல்ஹெய்ம் சொல்கிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குற்றச்சாட்டுகளை முற்றுமுழுதாக நிராகரித்துள்ளார் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் விசேட சமாதான பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம்.

நோர்வே, விடுதலைப் புலிகளுக்கு இரகசியமாக நிதி உதவியை வழங்கவில்லை மாறாக புலிகளின் சமாதான செயலகத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் பொருளாதார வளங்களை வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பல அரசியல் முடிவுகளை அவரின் வேண்டுகோளின் அடிப்படையில் புலிகளின் தலைவருடன் தாம் பகிர்ந்து கொண்டார் எனவும் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை, குருநாகலில் மக்கள் முன்னிலையில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சமாதான பேச்சுக் காலத்தில் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்கு பணம்

19 ஆம் பக்கம் பார்க்க



# ஜனாதிபதியின் பிறந்தநாளை முன்னிட்டு மாணவர்களுக்கு உதவி

## முல்லையில் 600 பேருக்கு உதவி கிடைத்தது



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டு முல்லை மாவட்ட இராணுவத் தளபதி ஜெஹத் டயஸ் பாடசாலை மாணவர்களுக்கும் உதவியற்ற குடும்பங்களுக்கும் நன்கொடை வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் எம். மோகனதாஸ் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

துணுக்காய் கோட்டத்திற்குட்பட்ட 45 பாடசாலையைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணமும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 150 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திர சிறியினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு அதிதிகளாக இராணுவ பொறுப்பதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், வலயக் கல்வி அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சுகாதாரப் பணிப்பாளர்கள் கலந்து சிறப்பித்தனர். (40)


வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : த. பிறைமினி

முகவரி : ஐயங்கன்குளம்.

அகவை 2 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


# ஆணுறுப்பில் வளையல் இட்டு புதிய அணுகுமுறையில் தாக்குதல்

## உடல் இயலாதவர் மீது இனந்தெரியாதோர் கைவரிசை

வெளிநாட்டில் விபத்தொன்றில் காயமடைந்து யாழில் சிகிச்சை பெற்றுவந்த நபரின் ஆணுறுப்பு மீது மூன்று வளையல்கள் பொருத்தி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நீர்வேலியைச் சேர்ந்த 2 பிள்ளைகளில் தந்தையே இவ்வாறு இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு ஆளாகினார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று இடம்பெற்றுள்ளதாக குடும்பத்தாரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். நீர்வேலியைச் சேர்ந்த 52 வயதுடைய 2 பிள்ளைகளில் தந்தையே இவ்வாறு தாக்குதலுக்கு ஆளாகியுள்ளார்.

இவர் வெளிநாட்டில் விபத்தொன்றில் காலில் படுகாயமடைந்திருந்த நிலையில் நாடு திரும்பி இங்கு வசிக்கின்றார். இதற்கு சிகிச்சை பெறவென ஜய்ப்பூர் நிறுவனத்திற்கு சென்றுவிட்டு மாலை 6 மணியளவில் வீடு நோக்கி இராசையா வீதியால் சென்றவேளை தலைக்கவசத்துடன் வந்த இருவர் இவர் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், ஆணுறுப்பில் 3 வளையங்களை மாட்டிவிட்டு வெளியில் சொன்னால் குடும்பத்துடன் கொலை செய்வதாக மிரட்டி யுமுள்ளனர்.

வெளியில் செல்ல பயந்த நிலையில் உடற்பாதிப்புக்குள்ளான குடும்பஸ்தர் நேற்று விடயத்தை உறவினர்களிடம் தெரிவித்த நிலையில் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று மாலை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தி 3 வளையங்களையும் அகற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. (இ)

# டெங்கை உருவாக்கிய 12 பேர் மீது சட்டநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

டெங்குத்தொற்றுக்கு ஏதுவாக நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த குற்றத்திற்காக கடந்த வாரத்தில் 12 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய சூழல் பாதுகாப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரணவீர தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதனையடுத்து 12 வீட்டு உரிமையாளர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்து எதிர்வரும் வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)


சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக்

ரீசைக்கிள் (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)

021 222 8680,
077 592 5088.

(C/3800)



மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும், சேவை நிலையங்களிலும் 31.10.2013 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 09.12.2014 தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி.
யாழ்ப்பாணம்.

(C/3908)



அதிமேதகு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களின் பிறந்த தின, ஜனாதிபதியாக பதவியேற்றமையை ஒட்டி வேலணை பிரதேச சபையின் வாழ்த்துச்செய்தி



அதிமேதகு ஜனாதிபதி
மகிந்த ராஜபக்ஷ

வடக்கில் வீசிய வசந்தமே
கிழக்கில் எழுந்த உதயமே
இருள் சூழ்ந்த எம் நாட்டிற்கு
ஒளி கொடுத்த நாயகனே
இத்தினத்தில் வாழ்க வாழ்க
என வாழ்த்துகின்றோம்.

(C/3471)

தவிசாளர்,
உபதவிசாளர், உறுப்பினர்கள்,
செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,

வேலணை பிரதேச சபை.


# மேல் நீதிமன்ற ஆணையாளராக பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளராக திருமதி சிவபாதசுந்தரம் நேற்று கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

நேற்று மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டதன் மூலம் இவர் தனது பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இவர் ஏற்கனவே வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற ஆணையாளராக கடமையாற்றியிருந்தார்.

இதேவேளை யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளராக கடமையாற்றிவந்த அன்னலிங்கம் பிரேமசங்கர் வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மேல் நீதிமன்ற பதிவாளர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# சுத்தமான குடிநீரை பெறுவது சவாலான விடயமாகவுள்ளது

## வலி.மேற்கு பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று எமது பிரதேசமானது சுகாதாரமான சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வதில் பல இடர்பாடுகளையும் சவால்களையும் எதிர்நோக்கிய வண்ணம் உள்ளது. இதனால் மக்கள் பல துன்பங்களையும் துயரங்களையும் சுமக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகி உள்ளனர் என வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர். திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேசத்தின் சர்வதேச கைகழுவுதல் தினம் விக்டோறியாக் கல்லூரி மண்டபத்தில் வேள்ட்விஷன் நிறுவனத்தினரால் அவ் அமைப்பின் திட்டப்பணிப்பாளர் அன்ரனி தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக .கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வேள்ட்விஷன் நிறுவனத்தினது பணிகளை வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. பல அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற மக்களது வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு இவ் அமைப்பு எமது பிரதேசத்திலே பல விடயங்களை மேற்கொண்டதற்கு மேலாக மாணவர்களுக்கான கல்வி, சத்துணவு, சுகாதாரம், மற்றும் ஆரோக்கியமான வாழ்வு தொடர்பில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை வரவேற்கத்தக்கது. இந் நிலையிலும் குடிநீர்த் தேவைகள் தொடர்பில் தற்போது எடுத்துவரும் முயற்சி என்பது எமது பிரதேச மக்களது மிக இன்றி அமையாத ஒன்றாகவே உள்ளது.

இவற்றுக்கும் மேலாக இன்றைய கைகழுவும் தினம் இன்னுமோர் முக்கிய விடயம்ஆகும். எம் மத்தியில் இன்று புது வகையான தொற்றும் நோய்கள் ஏற்பட்ட வண்ணம் உள்ளன. இவற்றில் இருந்து எம்மை நாமே பாதுகாக்கும் பொருட்டு இவ் வகையான நோய்களுக்கான காரணங்கள் மற்றும் ஏதுக்கள் தொடர்பில் எம் மத்தியிலும் விழிப்புணர்வுகள் மிக அவசியமான ஒன்றாகும். இந்த வகையில் மாணவர்கள் மத்தியில் இவ் விடயம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி நோய் வருமுன் காக்கும் நடவடிக்கைக்கு உதவியமை தொடர்பில் அந்நிறுவனத்திற்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (63)

# நாதவாணி பம்பாய் ஜெயஸ்ரீயின் இசைக்கச்சேரி நிகழ்வு



நாதவாணி பம்பாய் ஜெயஸ்ரீயின் இசைக்கச்சேரி நிகழ்வு கடந்த சனிக்கிழமை துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் வயலின் ஜே.கே. திலிப், மிருதங்கம் டில்லி சாய்ராம், கஞ்சிரா அநிருத் ஆத்ரேயா ஆகியோர் பங்கேற்றனர். அதிகளவான இசை இரசிகர்கள் இதில் கலந்து கொண்டதுடன் இடப் பற்றாக்குறையால் மேடையிலும் இரசிகர்கள் உட்கார்ந்திருந்து கச்சேரியை இரசித்தனர்.

நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் இசை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த சங்கீதபூஷணம் பாலசிங்கம், சங்கீத பூஷணம் கணபதிப்பிள்ளை, டொக்டர் கங்காதரன் (புல்லாங்குழல்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (48)

# சைவசமய அபிவிருத்திக்கழகத்தால் மாணவர்களுக்கான பரீட்சை

யாழ்.சைவ சமய அபிவிருத்திக் கழகம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசையை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே சைவ வினா விடைப்பரீட்சையை நடாத்தவுள்ளது.

சைவச் சிறார்களின் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கிடையே இப்போட்டி நடாத்தப் படவுள்ளதுடன் இப்போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும், அடுத்து ஐந்து இடங்களைப் பெறுபவர்களுக்கு சிறப்புப்பரிசில்களும் ஏனையோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

விண்ணப்பிக்கும் பாடசாலை மாணவர்கள் விண்ணப்பங்களை இல 82 நாவலர் வீதியிலுள்ள சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகத்தில் பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். பரீட்சை நடைபெறும் இடம் சுட்டிலக்கத்துடன் பின்னர் அறிவிக்கப்படும் என பரீட்சைச் செயலாளர் அறிவித்துள்ளார்.


# விசேட பூசை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் பிறந்ததினமான இன்று செவ்வாய்க்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் ஜனாதிபதியின் இந்து சமய இணைப்பாளர் பிரம்ம ஸ்ரீ இராமச்சந்திரக் குருக்களின் (பாபுசர்மா) ஏற்பாட்டில் விசேட பிரர்த்தனை மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு விசேட பூசைகள் ஆரம்பமாகவுள்ளதுடன் இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, முன்னாள் மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாடுகளுக்கு நல்லபிள்ளை... தமிழ் மக்களுக்கு...?






'நாகேந்திரராஜா கெட்டிக்காரன். அவன் எதைக்கேட்டாலும் தந்திடுவான். எதைச் சொன்னாலும் அதைச் செய்து தருவான். அப்பிடியொரு தங்கமான குணம் அவனுக்கு' என்று சொல்லிச் சொல்லியே கணவரின் சொத்தையெல்லாம் அவருடைய நண்பர்களும் சகோதரர்களும் தந்திரமாக அபகரித்துக்கொண்டார்கள் என எப்போதும் சொல்லிச் சொல்லிக் கவலைப்படுகிற தையல்நாயகி அம்மாவைப் போலத்தான், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நல்லசக்தி என்று சொல்லிச் சொல்லியே இந்தியாவும் மேற்குலகமும் தங்களுடைய காரியங்களை இலங்கையில் சாதித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழ்ச்சனங்கள் தையல்நாயகி அம்மாவைப்போல எல்லாத்தையும் இழந்து புலம்புகின்ற நிலையில் உள்ளனர்.

தான் பொறுப்புச் சொல்லவேண்டிய அல்லது தன்னுடைய பொறுப்புக்குரியவர்களை அந்தரிக்க விட்டுவிட்டு பிறருக்குச் சேவகம் செய்கிற காரியம் ஒருபோதும் நல்லதல்ல.

தாயைப் பிச்சையெடுக்க விட்டுவிட்டு மகன் அன்னதான சத்திரம் வழங்குவதற்கு ஒப்பானது.

ஆனால் இப்படித்தான் பொறுப்பானவர்களின் பல காரியங்கள் நடக்கின்றன.

அடுத்து வரப்போகிற ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களையும் விட அமெரிக்காவும், இந்தியாவும், சீனாவும் தான் அதிகமாக இலங்கையில் வேலைசெய்யப் போகின்றன.

தேர்தல் அறிவிப்பு வருவதற்கு முதலே, அமெரிக்க ஏஜென்சிகள் இங்கே [இலங்கையில்] மும்மரமாக வேலைசெய்யத் தொடங்கிவிட்டனர்.

ஆட்சி மாற்றம் தேவை என்ற கோதாவில் ஊடகங்கள், அரசியற்கட்சிகள், தொண்டு நிறுவனங்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் என பல வழிவங்களில் இந்த வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

இதற்காக தாராளமாக நிதி வாரி இறைக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவரவர் நன்றாகப் பிழைக்கப்போகிறார்கள்.

பெரிய நாடுகளுக்கு இந்த மாதிரி சில்லறைகளை எறிவதொன்றும் பெரிய விசயமில்லை.

றாலைப் போட்டு சுறாவைப் பிடிக்கும் கைங்காரியம் இது.

இங்கே உள்ள பிழைப்புவாதிகள் சனங்களை வைத்து பிழைப்பதற்கு இதுவுமொரு சந்தர்ப்பம்.

தமது மக்களுக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைக்க வேணும் என்று நினைத்து இந்த மாதிரி பிறருக்கு விலை போகிறார்கள்.

இலங்கைத் தீவின் அரசியல் அவலம் இப்படித்தான் இருக்கு.

இந்தச் சில்லறைகளை வைத்தே இலங்கையை தங்கள் கால்களுக்கு இடையில் கொண்டு வருவதற்கு இந்தப் பெரிய நாடுகள் போட்டி போடுகின்றன.

யாருடைய கால்களுக்கு இடையில் தங்கள் தலையை வைப்பது என்பதுதான் இவர்களுடைய பிரச்சினை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அது இந்தியாவினுடைய மடியில் சுகமாக உறங்குவதற்கு விரும்புகிறது.

ஆனால் அதையும் விட அமெரிக்காவின் மடியில் உறங்குவதே நல்லது என்று புலம்பெயர் தமிழ்ப் பிரமுகர்களும் தமிழரசுக் கட்சியினுடைய பிரபலங்களும் விரும்புகின்றனர்.

இந்தியாவோடு உறவு வைத்தால் எலும்புத்துண்டே கிடைக்கும், அமெரிக்காவோடு உறவு கொண்டாடினால் புரியாணி சாப்பிடலாம் என்று சொல்கிறார்கள் இந்தப் பிரபலங்கள்.

இதைப்போலத்தான் தென் இலங்கையிலும் அமெரிக்கக் காவடியை ஆடுவதற்கு விரும்புகிறது ஐ.தே.க. இதற்கு தோதாகத் தாளம் போட முயற்சிக்கின்றன அங்குள்ள சில்லறைகள்.

இதற்குள் மகிந்த அணியோ சீனாவுக்காக காவடியை ஆடுகிறது என்று குற்றச்சாட்டு வேறு.

இந்தத் தடவையும் மகிந்தவுக்கு எதிராக, அவரைக் கவிழ்க்கும் நோக்கோடு யுத்தக் குற்றச்சாட்சிகளை ஐ.நாவோ, அமெரிக்காவோ அரங்கேற்றக்கூடும்.

இப்படியே எங்கள் தேசம் நாறிப்போய்க் கிடக்கிறது. தையல்நாயகி அம்மாவைப்போல எல்லோரும் புலம்பிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

பதவி உங்களுக்குப் பெருமை தருவதைவிட நீங்கள் தான் அதைப் பெருமைப்படுத்த வேண்டும். - பெர்நார்க்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## குறை சொல்லிப் பிழைப்போர்!

உலகத்திலேயே சுலபமான வேலை குறை கண்டுபிடித்துக் கொண்டிருப்பதுதான் என்பது எல்லோருக்கும் தெரியும். அரசியலிலும் அதுதான் மிகச் சுலபமானதும் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க வாய்ப்பானதும் ஆகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியல் பிழைப்பு இந்த உத்தியை வைத்துத்தான் நடந்தேறி வருகிறது. மேடைகளிலும் அறிக்கைகளிலும் முழங்குவதற்கு இத்தகைய குறைகளின் பட்டியல் ஒன்று அவர்களிடம் எப்போதும் உண்டு.

அரசாங்கம் ஒதுக்கிய நிதியை எந்த வேலைக்கும் பயன்படுத்தாமல் திரும்பத் திறைசேரிக்கு அனுப்பிவிட்டு, தாங்கள் எதுவும் செய்யாததற்கு அரசாங்கத்தையே காரணமாய்க் குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

இராணுவம் முற்றாக வெளியேறவில்லை, காணிகள் முழுவதும் மீளளிக்கப்படவில்லை, ஆளுநர், செயலாளரை மாற்றவில்லை நாங்கள் எப்படி மாகாண சபையை நடத்துவது என்கிறார்கள். பதவிகளை பெற்று வைத்துக்கொண்டு சும்மா இருப்பதற்கும் இந்தக் குறைகள் பட்டியல்தான் சாட்டு.

தாங்கள் கேட்கின்ற அதிகாரங்கள் எவையெவை என்று தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து முன்வைக்கவோ அதற்காகப் போய்ப் பேசவோ வக்கில்லை. அதை மறைக்க அரசாங்கம் ஏன் தீர்வைச் சொல்லவில்லை என்று கேட்டுவிட்டுத் தப்புகிறார்கள்.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலையும் கூட இராஜதந்திரமாக அணுகமுடியவில்லை. எல்லோருமே பிழையானவர்கள்... நாங்கள் என்ன செய்ய முடியும் என்று நிலைப்பாடு எதுவும் எடுக்க முடியாமல் தடுமாறுவதுதான் இவர்களது தலைமைத்துவம்!

இவர்களைப் போல குறை சொல்லிக்கொண்டிருப்பது சுலபம்; எதையேனும் செய்துமுடிப்பதுதான் கடினம் என்பதை விளக்கும் ஒரு கதை.

ஓவியன் ஒருவன் தான் வரைந்த ஓவியத்தை அனைவரின் பார்வையிலும் படும்படியான பொது இடத்தில் மாட்டி வைத்தான். அதனருகில், “சிறப்பு பெற்ற ஓவியரிடம் பயிற்சி பெற்று வந்திருக்கிறேன். நான் கற்றுக்கொண்ட ஓவியக் கலை குறித்து எனக்கு ஒரு சுய மதிப்பீடு தேவைப்படுகிறது. இந்த ஓவியத்தில் தவறுகள் ஏதேனும் காணப்பட்டால் அதை இந்தத் தாளில் குறிப்பிட வேண்டுகிறேன்” என்று எழுதி ஒரு தாளையும் பேனாவையும் அதில் கட்டித் தொங்க விட்டுச் சென்றான்.

மாலையானதும், வந்து பார்த்தான். அந்தத் தாளில் அவன் ஓவியத்தைப் பற்றிப் பல குறைகளை எழுதியிருந்தனர். சிலர், “இதெல்லாம் ஒரு ஓவியமா? இதைப் பொது இடத்தில் வேறு வைத்துக் கருத்து வேறு கேட்க வந்துவிட்டாய்...?” என்று மோசமாகவும் எழுதியிருந்தார்கள்.

அவனது ஆசிரியர் வந்து பார்த்து விட்டு, அவனிடம், “நான் கற்றுக்கொண்ட ஓவியக் கலை குறித்து எனக்கு ஒரு மதிப்பீடு தேவைப்படுகிறது. இந்த ஓவியத்தில் எங்காவது தவறு காணப்பட்டால் அந்த இடத்தில் இங்கிருக்கும் வண்ணங்கள் மற்றும் தூரிகையைப் பயன்படுத்தித் தவறைத் திருத்தம் செய்து உதவிட வேண்டுகிறேன்” என்று எழுதி அதனருகில் தூரிகை மற்றும் வண்ணங்களையும் வைக்கச் சொன்னார்.

அவனும் அவனது ஆசிரியரும் அந்த இடத்துக்கு மீண்டும் திரும்பி வந்து பார்த்தபோது... ஆச்சரியம்... ஓவியம் எந்த இடத்திலும் திருத்தப்படவில்லை.

குறைகள் கண்டுபிடித்துக் கொண்டிருப்பது எல்லோருக்கும் எளிதானது. அந்த வேலையைச் செய்து முடிப்பது மிக மிகக் கஷ்டமானது. அதைச் செய்யத்தான் நமக்குத் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள் – குறைகள் சொல்லிக்கொண்டிருக்க அல்ல.

- ஆசிரியர்



**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 2014**

“காடும் நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக்கூடாது.”

———— தமிழக கவிஞர் அறிவுமதி.

# ஒரு இலட்சம் மாணவர்கள்
# 2020 இல் பல்கலைக்கு இணைப்பு

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டில் 100,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்க திட்டமிடப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பட்டதாரிகளுக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், பட்டப்படிப்பு கற்கைகளுக்காக மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. இதன்நிமித்தம், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. 2020 ஆம் ஆண்டளவில் ஒரு இலட்சம் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இந்த இலக்கை அடையும் நோக்குடன் பல்கலைக்கழகங்களின் கல்வித் தரம் மற்றும் கல்விசார் வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால், 2020 ஆம் ஆண்டு காலத்தில் ஆசியாவின் கல்விக் கேந்திரத்தளமாக இலங்கை மாறுவதுடன் உலகின் சிறந்த பல்கலைக்கழகங்கள் வரிசையில் இலங்கைப் பல்கலைக்கழகங்களும் இடம்பிடிக்குமென உயர் கல்வி அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதற்காக பல்கலைக்கழகங்களின் கல்வி நிலை, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இதர கல்விசார் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்குமான ஆய்வுகள் பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதுதவிர, உலகின் முதற்தரப் பல்கலைக்கழகங்களாக இலங்கைப் பல்கலைக்கழகங்களை மாற்றவும் கல்வித் தரத்தை அதிகரிக்கவும் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மாணவர்களை சமகால சவால்களை எதிர்கொள்ளும் அறிவாற்றல் உள்ளவர்களாக உருவாக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென குறிப்பிடும் உயர் கல்வி அமைச்சு சிறந்த அறிவுடையவர்களைக் கொண்டு நாட்டை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல முடியுமெனவும் சுட்டிக்காட்டுகின்றமை தெரிவித்துள்ளது.

# மன்னார் நகரப்பகுதி கடைகளில் பணியாற்றும் பெண்களுக்கு அநீதி

### இரவு நீண்டநேரமாகியும் வீடுசெல்ல அனுமதி மறுப்பு

மன்னார் பஸார் பகுதி உட்பட மன்னார் நகரப் பகுதியில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் பெண்கள் அதிக அளவில் கடமையாற்றுகின்றனர். ஒரு சில வர்த்தக நிலைய உரிமையாளர்கள் பெண்களை மாலை 5.30 மணியுடன் வீடு செல்ல அனுமதிக்கின்றனர்.

ஆனால் பல வர்த்தக நிலைய உரிமையாளர்கள் வர்த்தக நிலையங்கள் மூடும் வரை பெண்களை வீடு செல்ல அனுமதிப்பதில்லை என பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர். இரவு 8 மணிவரை சில வர்த்தக நிலையங்களில் பெண்கள் கடமையாற்றுவதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் பெண்களை மாலை 5.30 மணியுடன் வீடு செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும், இவ்விடயத்தில் மன்னார் வர்த்தக சங்கம், பெண்கள் அமைப்புக்கள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

# பாப்பரசரின் வருகையை முன்னிட்டு கொழும்பில் சி.சி.ரீ.வி. கண்காணிப்பு

(கொழும்பு)

பாப்பரசர் பிரான்சிஸின் வருகையின்போது கொழும்பு பகுதியை சி.சி.ரீ.வி. கமராக்கள் மூலம் கண்காணிக்க பொலிஸ் தலைமையகம் திட்டமிட்டு வருகிறது.

வரும் ஜனவரி 13 ஆம் திகதி புனித பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இதையொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸ திணைக்களம் செய்து வருகிறது என அதன் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஏற்கனவே சி.சி.ரீவி. பாதுகாப்பு விசேட திட்டம் நடைமுறையில் உள்ளது. 90 இலட்சம் ரூபா செலவில் தெமட்டகொட, ஒறுகொடவத்த, வெலிக்கட சிறைச்சாலைப் பகுதிகளில் கமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

அத்துடன் நாடாளுமன்றம், தாஜ் சமுத்ரா ஹோட்டல் மற்றும் காலிமுகத்திடல் பகுதிகளிலும் கமரா கண்காணிப்பு உள்ளது.

எனினும் இந்தப் பகுதிகளின் கண்காணிப்பை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது. பேஸ்லைன் வீதி, பேலியகொட, ஒறுகொடவத்த, மற்றும் களனியா பாலம் ஆகிய பகுதிகளில் கமராக்கள் பொருதப்படவுள்ளன என்றார்.

# தனது வியாபாரத்தை ஆரம்பிக்க பேச்சைத் தொடரும் வர்த்தகப் புலி

(கொழும்பு)

இலங்கையில் தனது வியாபாரத்தை ஆரம்பிக்கவுள்ள அவுஸ்ரேலிய வர்த்தகப் புலி என அழைக்கப்படும் கசினோ வர்த்தகரான ஜேம்ஸ் பாக்கர் தொடர்ந்தும் தமது வியாபார நடவடிக்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

457 மில்லியன் டொலர்கள் பெறுமதியான அதிசொகுசு வசதிகளைக் கொண்ட கிரான் ஹோட்டல் டி.ஆர். விஜயவர்தன மாவத்தையில், பேரவாவிக்கு அண்மையில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஹோட்டலுடன் மேலும் பாரியளவிலான மூன்று சுற்றுலா விடுதிகளை நிர்மாணிப்பதற்காக அரசு அனுமதி வழங்கியுள்ள போதிலும், அந்த ஹோட்டல்களில் கசினோ பிரிவு அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதேவேளை சர்வதேச கசினோ அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தி இந்த ஹோட்டல்களிலும் கசினோ பிரிவை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் கசினோவிற்கு புதிய வரி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால், வர்த்தகரான ஜேம்ஸ் பாக்கர் அந்த சவாலுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

# வடமாகாணத்தில் நம்பக் கடினமான அளவில் அபிவிருத்திகள் நடந்திருப்பதற்கு நமது அரசியல் அணுகுமுறையே காரணமாகும்



**வரவு செலவுத்திட்டத்தின் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக்கான குழுநிலை விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) ஆற்றிய உரை**

**கௌரவ சபாநாயகர் அவர்களே!**

சுகாதாரத்துறையில் இன்று எங்கள் நாடு பல படிகள் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது. முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட, நான் சிறுவனாக இருந்த போது இருந்த நிலையை விட, இன்று எவ்வளவோ மாற்றங்கள் சுகாதாரத் துறையில் ஏற்பட்டிருக்கின்றன.

இதையிட்டு நாம் பெருமைப்படலாம்.

சுகாதாரத்துறையை நான் இரண்டு விதங்களில் பார்க்க விரும்புகிறேன். ஒன்று, எங்களுடைய மக்கள் சுகாதாரமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பது என்பதாகும். ஒருவர் ஆரோக்கியமாக இருக்கும்போது நோய் அவரை நெருங்காது. நோய் இல்லை என்றால் வைத்தியத்துக்கும் மருந்துக்கும் அவசியமில்லை. ஆகவே நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அதற்கான ஏதுநிலைகளை உண்டாக்க வேண்டும்.

ஒரு காலம் எம்மைத் தொற்று நோய்களும் மலேரியா போன்ற வியாதிகளும் தாக்கின. இப்பொழுது டெங்கு, நெருப்புக் காய்ச்சல், சுத்தமான நீரில்லாததால் ஏற்படுகின்ற நோய்கள் என சில அபாயங்கள் உண்டு. ஆகவே இந்தச் சுகாதார முன்னேற்பாடுகள் முக்கியமானவை என்று கருதுகிறேன்.

அடுத்தது, சிறந்த மருத்துவ சேவையாகும். இதற்கு நல்ல சேவையாற்றல் உடைய மருத்துவர்களும் மருத்துவ சேவையினரும் நல்ல மருத்துவப் பொறிமுறையும் தேவை.

இந்த இரண்டு விடயங்களும் சிறப்பான முறையில் ஒருங்கிணையும்போது நாம் நல்லதோர் ஆரோக்கியமான சமுதாயத்தை எமது நாட்டிலே உண்டாக்க முடியும்.

யாழ்ப்பாண மருத்துவமனை இன்று புதுப்பொலிவோடும் அனைத்துவிதமான வசதிகளோடும் இயங்கக் கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை எட்டுவதற்காக சுகாதார அமைச்சருடன் இணைந்து முன்முயற்சிகளை மேற்கொண்ட எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

எமது சரியான அரசியல் வழிமுறை மூலமாக எமது பிரதேசங்களை வளர்ச்சியடைய வைத்து, எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறோம்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைப் போன்று ஏனைய பிரதேச வைத்தியசாலைகளும் மாவட்ட வைத்தியசாலைகளும் ஆதார வைத்தியசாலை போன்ற அனைத்து மருத்துவமனைகளும் உயர்நிலை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது யாழ் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியை நவீன வசதிகளுடன் அமைப்பதற்கு 1200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான காணியைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அவருக்கு எமது மக்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனாலும் இங்கே உள்ள பாரிய பிரச்சினையாக இருப்பது மருத்துவர்களின் பற்றாக்குறை. முக்கியமாக பின்தங்கிய பிரதேசங்களில் மருத்துவர்கள் இல்லாத நிலை காணப்படுகிறது.

எழுவைதீவு, முள்ளியான், உரும்பிராய், வட்டுக்கோட்டை, குரும்பசிட்டி, புத்தூர் ஆகிய வைத்தியசாலைகளுக்கு நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

தற்போது இவ்வைத்தியசாலைகளில் ஒப்பந்த வைத்தியர்களே கடமையில் உள்ளனர். யாழ் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் 40 வைத்திய அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

இந்த வெற்றிடங்கள் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளன. இதற்காக சிங்கள மருத்துவர்கள் சேவையாற்ற முன்வந்திருப்பதையிட்டு எமது மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றிகள்.

முன்பொருகாலம் தமிழ் மருத்துவர்கள் சிங்களப்பகுதிகளில் இதேபோல மருத்துவசேவையைச் செய்தனர். இன்று அதேபோல சிங்கள மருத்துவர்கள் எமது பிரதேசங்களுக்கு வந்து சேவையாற்றுகிறார்கள்.

ஆனால், தொடர்பாடல் மொழிப்பிரச்சினை நோயாளர்களுக்கும் மருத்துவருக்கும் இடையில் பிரச்சினையாக உள்ளது. இதை நாம் விரைவில் நிவர்த்தி செய்ய வேணும்.

சிங்கள வைத்தியர்கள் தமிழ்ப்பகுதிகளில் மொழி தெரியாத நிலையில் வேலை செய்வதால் மக்களுக்குப் பிரச்சினையாக உள்ளது என்று வடபகுதி ஊடகங்கள் அடிக்கடி செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இப்படிச் செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் தமிழ் வைத்தியர்கள் - குறிப்பாக மருத்துவத்துறையில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் தங்கள் சொந்த நலனை முதன்மைப்படுத்திக் கொண்டு, நாட்டை விட்டு வெளியேறுவதைப்பற்றி எழுதுவதில்லை. அல்லது தமிழ்ப்பகுதிகளை நாடாமல் வசதியான வெளியிடங்களை நோக்கிச் செல்வதைப்பற்றி எழுதுவதில்லை. இதை மக்களும் தட்டிக்கேட்பதில்லை.

தமிழ்ப்புத்திஜீவிகள் என்று சொல்லிக்கொண்டு, தேர்தல்காலங்களில் மட்டும் மண் பற்று, மக்கள் பாசம் என்று அறிக்கை விடுகிறவர்களும் அக்கறைப்படுவதில்லை.

இது எமக்கு ஏற்பட்டுள்ள ஒரு மோசமான நிலைமையாகும்.

**இளவயது மருத்துவர்கள் பலர் தங்கள் மண்ணில் இருந்து கொண்டே தங்கள் மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டும் என்ற அர்ப்பண உணர்வுடன் சேவையாற்றுகிறார்கள். இவர்களை நாம் பாராட்ட வேண்டும்.**

ஆனால், இன்னொரு தொகையான தமிழ் மருத்துவர்கள் - அதிலும் இளவயது மருத்துவர்கள் தங்கள் மண்ணில் இருந்து கொண்டே தங்கள் மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டும் என்ற அர்ப்பண உணர்வுடன் சேவையாற்றுகிறார்கள். இவர்களை நான் பாராட்டுகிறேன்.

இன்னும் மருத்துவர் பற்றாக்குறையுடன் பல மருத்துவமனைகள் காணப்படுகின்றன. தெல்லிப்பளை வைத்தியசாலையின் புற்றுநோய்ப்பிரிவிற்கு 08 வைத்தியர்களும் 10 தாதிய உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முக்கியமாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 08 பேரும், எக்ஸ் கதிர் படப்பிடிப்பாளர்கள் 04 பேரும் 08 மருந்தாளர்களும் 32 மருந்துக் கலவையாளர்களும் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர்.

சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைகளுக்கு ஆய்வுகூடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளனர்.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கான 15 வெற்றிடங்களும் 47 குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளன.

அனலைதீவு மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் படகு ஒன்று வழங்கப்பட வேண்டும்.

பருத்தித்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கும் தாதிய உத்தியோகத்தர்களுக்கும் விடுதிகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

புங்குடுதீவு, நயினாதீவு, வரணி, கோண்டாவில் வைத்தியசாலைகளுக்கு வெளிநோயாளர்களுக்கான கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும்.

நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, வேலணை, காரைநகர் ஆகிய வைத்தியசாலைகளுக்கு குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான தங்கு விடுதிகள் அமைக்கப்பட வேண்டும்.

இதைத் தவிர, வடமாகாணத்தில் ஏறக்குறைய 200 இற்கு மேற்பட்ட மருத்துவ மாதர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளன. இந்தப் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களை நியமிப்பதற்கான கல்வித்தகமை உடையவர்கள் தற்போது இல்லை. கடந்த காலத்தில் நடந்த யுத்தம் எமது இளைய தலைமுறையினரின் கல்விக்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்தியிருந்ததால், பல மாணவர்கள் உயர் தகைமைகளைப் பெற முடியாமல் போய்விட்டனர்.

வருடத்திற்கான உலர் உணவு விநியோக ஒப்பந்தத்தில் வடமாகாண வைத்திய சாலைகளுக்கான உலர் உணவு பெறுகை கேள்வி கோரல்களில் குறைந்த விலையில் கேள்வி கோரிய விண்ணப்பதாரிகளை நிராகரித்து விட்டு உச்ச விலை கோரியவரிடம் வடமாகாண சுகாதார அமைச்சர் ஒப்பந்தத்தை செய்துள்ளமை உறுதியாகியுள்ளது.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகள் (உணவு வழங்கலுக்காக)

சீனி ஒரு கிலோ - 125.00

அரிசி ஒரு கிலோ - 82.00 - 2013 ஜனவரி முதல்

மைசூர் பருப்பு ஒரு கிலோ - 210.00

மிளகாய்த்தூள் ஒரு கிலோ - 700.00 ரூபா

கதலி வாழைப்பழம் ஒரு கிலோ - 150.00 ரூபா

(சந்தையில் 40 ரூபாவுக்கு மேல் ஒருபோதுமே வந்ததில்லை).

யாழ்ப்பாணத்தில் போதனா வைத்தியசாலை தவிர மற்றைய சகல வைத்தியசாலைகளும் வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ்தான் இயங்குகின்றன. கடந்த வருடம் செப்ரெம்பரில் உருவான மாகாண சுகாதார அமைச்சுக்கு கிடைத்த அரசின் நிதியினை உரிய முறையில் செலவு செய்யாமல் மக்களின் நலன் சார்ந்து சிந்திக்காமல் இருப்பது கவலைக்குரியது.

நீண்ட காலமாக யாழ் போதனா வைத்திய சாலையில் தொண்டர்களாக கடமையாற்றும் ஊழியர்களை நியமிப்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தற்போது அமைச்சின் அறிவிப்பில் க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடம் சித்தி கேட்டதால் பெரும் பாதிப்படைந்துள்ள இவர்கள் மிகவும் கஷ்டமான வறிய குடும்பங்களில் பிறந்தவர்கள்.

**யாழ்ப்பாணத்தில் 50 பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சியை நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரியபோது 13 விண்ணப்பங்களே கிடைக்கப்பெற்றன. இது ஒரு துரதிஷ்டமான நிலையாகும். இந்த நிலையை மாற்றுவதற்கு நாம் முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது.**

ஒரு விசேட ஏற்பாட்டின் மூலம் தகைமைச் சான்றில் சாதாரண சித்தியை ஏற்றுக்கொண்டு இந்த ஊழியர்களுக்கான பயிற்சியை வழங்குமிடத்து உரியவர்களுக்கான வேலை வாய்ப்பினையும் வழங்கலாம். மக்கள் சிரமங்களையும் தவிர்க்கலாம்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மருத்துவ விடுதி அமைக்கப்பட வேண்டியுள்ளது. இலங்கையில் வேறு எங்குமே மருத்துவ விடுதிகள் இல்லாத வைத்தியசாலைகள் இல்லை என்பதையும் இருக்கின்ற ஒரே வைத்தியசாலையாக முல்லைத்தீவு மருத்துவமனை மட்டுமே உள்ளது என்பதையும். இங்கே கவனப்படுத்துகிறேன்.

அரசாங்கத்துடன் நாம் இணைந் திருப்பதால், பல விதமான முன்னேற்றங்களையும் வளர்ச்சியையும் எட்டியிருக்கிறோம். வடமாகாணத்தில் நம்பக் கடினமான அளவில் பலவற்றையும் கட்டி எழுப்பியிருக்கிறோம்.

இதற்கு எமது அரசியல் வழிமுறையே காரணமாகும். மக்களுக்குத் தேவையான ஒரு அரசியல் தெரிவைச் செய்த படியால்தான் இவற்றை எம்மால் செய்ய முடிந்தது.

# பொதுவேட்பாளர் நியமனமானதும் எதிர்க்கட்சி கூட்டணி சிதறிவிடும்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் தீர்மானிக்கப்பட்டவுடன் எதிர்க்கட்சிக் கூட்டணி சிதறிவிடும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டம், மித்தெனிய நகரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டில் வாழும் அனைத்து இன, மத மற்றும் குலம், கோத்திரம், பல்வேறு தொழில்துறைகளைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைக்கும் ஒரே பொது வேட்பாளர் ஜனாதிபதி மகிந்த மாத்திரமே. ஆளுங்கட்சியின் பொது வேட்பாளரும் அவர்தான்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. அவரது வெற்றி ஏற்கனவே உறுதி செய்யப்பட்டு விட்டது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த எதிர்க் கட்சிகளின் கூட்டணி அமைக்கப் பட்டுள்ளது. ஆனால் பொது வேடபாளர் யார் என்பது தெரிந்தவுடன் அந்தக் கூட்டணி சிதறி விடும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தோல்வியில் இருந்து பாதுகாத்து, அவரது கட்சித் தலைமைத்துவத்தை பாதுகாக்கவே இந்த பொது வேட்பாளர் நாடகம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அமைச்ர் அமரவீர தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

# 3 மணிநேர வேலை நிறுத்தம் 10 கோடி ரூபா நஷ்டம்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை சுதந்திர ஊழியர்சங்க ஊழியர்களால் 5 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தால் 10 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விமானநிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை சுதந்திர ஊழியர்சங்க ஊழியர்கள், 5 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த புதன்கிழமை காலை முதல் சுமார் மூன்று மணிநேர வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கை சுதந்திர ஊழியர்சங்கத்தைச்சேர்ந்த ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தால், புதன்கிழமை காலை முதல் விமான நிலையத்தின் இயல்பு நிலை ஸ்தம்பிதமடைந்திருந்தது.

10,000 ரூபாய் கொடுப்பனவு, வைத்திய காப்புறுதி, 4 சதவீதம் அனர்த்த கடன், பியா புத்து மன்றத்தின் ஊடாக தொழில்வாய்ப்பு, பாதுகாப்பு பிரதானி தொடர்பில் விசாரணை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. வேட்பாளராக கரு வலியுறுத்தும் பிக்குகள் முன்னணி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக கரு ஜயசூரியவை அறிவிக்காது போனால், ஐக்கிய பிக்குகள் முன்னணி கட்சியின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் ஒதுங்கப் போவதாக அவ்வமைப்பின் போஷகர் கிராம்பே ஆனந்த அனுநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பான ஐக்கிய பிக்குகள் முன்னணி, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள விசேட கடிதம் ஒன்றிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய உற்பத்தி, அறிவு மூலமே பொருளாதாரம் முன்னேறும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



புதிய உற்பத்திகள், அறிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் மூலமே எதிர்காலத்தைக்கட்டி எழுப்பலாம்.

இப்பணியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரண வக்க தெரிவித்தார்.

எதிர்வரும் தசாப்தம் எமக்கெல்லாம் மிகவும் தீர்க்கமான காலகட்டமாகும்.

சமூக, பொருளாதார ரீதியில் முன் செல்வதா? பின்னடைவு காண்பதா? என்பதை இந்த தசாப்தத்திலேயே நாம் தீர்மானிக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

உலக விஞ்ஞான தின ஞாபகார்த்த வைபவத்தில் அமைச்சர் இவ்வாறு உரையாற்றினார். பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

தேசிய விஞ்ஞான தினம் பாடசாலை மட்டத்தில் மட்டும் நினைவு கூரப்படாமல் முழுநாட்டு மக்களின் எதிர்கால நன்மை கருதி முக்கிய தேசிய வாரமாகக் கொள்ளப்பட வேண்டும்.

நாம் 21ஆம் நூற்றாண்டில் புதிய உற்பத்தி யுகத்தில், கைத்தொழில் புரட்சியின் மூன்றாவது யுகத்தில் வாழ்பவர்கள்.

எனவே நாம் புதிய உற்பத்திகளை முன்கொண்டு செல்வது எமக்கு பாரிய பொறுப்பாகும்.

21ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் நாம் எங்கு நிற்கிறோம்? இலங்கையின் நிலைப்பாடு என்ன? போன்றவற்றை எமது பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும்.

உலகம் நாளுக்கு நாள் இன்றியமையாத தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# கரு பொதுவேட்பாளரானால் நானே அவரை தோற்கடிப்பேன்

## என்கிறார் உபேக்ஷா எம்.பி.

எதிர்க்கட்சிகளின் சார்பில் கரு ஜயசூரிய பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டால் அவரைத் தோற்கடிக்க தான் மட்டுமே போதும் என உபேக்ஷா சுவர்ணமாலி தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. விலிருந்து ஆளுங்கட்சிக்குத் தாவியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் உபேக்ஷா சுவர்ணமாலி இது தொடர்பாக ஊடகங்களுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கரு ஜயசூரிய அறுபதாயிரம் வாக்குகளையும் நான் எண்பத்தோராயிரம் அளவிலான வாக்குகளையும் பெற்றுள்ளோம்.

அந்த வகையில் கம்பஹா மாவட்டத்திலேயே நான் அவரைவிட அதிகளவு வாக்குகளைப் பெற்றுள்ளேன்.

அதுவும் முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்ட போது எனக்கு இந்தளவு வாக்குகள் கிடைத்துள்ளன.

இப்படிப்பட்ட ஒருவரை பொது வேட்பாளராக களமிறக்கினால் அவரை எதிர்த்துப் போட்டியிட நான் தயார்.

நாடு முழுவதும் அவரைவிட கூடுதலான வாக்குகளை என்னால் பெற முடியும்.

அப்படியிருக்க இவர்கள் எப்படி ஜனாதிபதிக்கு எதிராக வெற்றிபெற முடியும் என்றும் உபேக்ஷா சுவர்ணமாலி கேள்வியெழுப்பியுள்ளார்.

# உள்ளூர் வங்கிகளின் நிதியுடன் குடிநீர் விநியோகத்திட்டம்

உள்ளூர் வங்கிகளின் நிதியுடன் குடிநீர் விநியோகத்திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடுமுழுவதிலும் 44 வீதமானோர் குடிநீர் வசதிகளை பெறுகின்றனர். ஏனைய 60 சதவீதமான சகலருக்கும் குடிநீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் இலக்காகும். உள்ளூர் கொந்தராத்துகாரர்கள் மற்றும் உள்ளூர் வங்கிகளின் உதவியுடன் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி 30 குடிநீர்விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக 29.1 பில்லியன் ரூபாவும் ஏனைய 4 கருத்திட்டங்களுக்காக 10,095பில்லியன் ரூபாவும் முதலீடு செய்வதற்கும் அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.அமைச்சரவையின் இணைக்கமிட்டியின் சிபார்சின் பேரில் கொந்தராத்துக்காரர்களிடம் இத்திட்டத்தை ஒப்படைப்பதற்காக நீர் வள வடிகால் அமைப்பு அமைச்சர் தினேஷ்குணவர்த்தன அமைச்சரவைக்கு விடுத்த ஆலோசனைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.



வயல்களிலுள்ள களைகளை கட்டுப்படுத்துவதற்காக ஆடுகளை வயல்களில் விட்டு களைகள் கட்டுப்படுத்தும் நடவடிக்கை பழைய காலத்திலிருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதாவது, வயல் வேளாண்மைகளில் ஆடுகளை விடும்போது, ஆடுகள் களைகளை மாத்திரம் உட்கொள்கின்றன. இதனால், களைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்தமுறை மட்டக்களப்பு மற்றும் அம்பாறை உள்ளிட்ட மாவட்ட வயல்களில் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. வவுணதீவு கண்ட வயலில் ஆடுகள் களைகளை உட்கொள்வதைக் காணலாம்

# பேஸ்புக்கால் வந்த வினை தலைமறைவான மாணவன்

பேஸ்புக் மூலம் பெண்களைக் கிண்டல் செய்து கொண்டிருப்பது குறித்து எச்சரிக்கப்பட்ட மாணவன் ஒருவன் அச்சம் காரணமாக தலைமறைவாகியுள்ளான்.

காலி பகுதியில் பிரபலமான பாடசாலையொன்றின் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவனே இவ்வாறு தலைமறைவாகியுள்ளதாக தினமின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த மாணவன் கணிதத்துக்கான ஒலிம்பியாட் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற திறமையான மாணவன் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேஸ் புக் மூலமாக குறித்த மாணவன் பெண்களைக் கிண்டல் செய்வது, தரங்கெட்ட வார்த்தைப் பிரயோகம், ஆபாச படங்களை அனுப்புதல் என்றவாறாக தொல்லை கொடுத்து வந்துள்ளான்.


இதன் காரணமாக பாதிக்கப்பட்ட ஒரு யுவதி அவனுடன் நைசாக உரையாடி மாணவன் குறித்த தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.




பின்னர் குறித்த மாணவன் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப் போவதாக அச்சுறுத்திய நிலையில் அச்சம் காரணமாக மாணவன் வீட்டை விட்டு தலைமறைவாகியுள்ளான்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தினமின செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# மாநகர சபை மின்னியலாளர்களுக்கு நியமனப் பத்திரங்கள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் பணியாற்றும் மின்னியலாளர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிரந்தர நியமனப் பத்திரங்களை வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்பிரகாரம் யாழ்.மாநகர சபையில் தற்காலிக மின்னியலாளர்களாக பணியாற்றி வந்த 11 பேருக்கு நிரந்தர நியமனம் பததிரங்களை அமைச்சர் உள்ளிட்டோர் வழங்கி வைத்தனர்.

இதில் கருத்துரையாற்றிய அமைச்சர், வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்கும் கிடைக்கப் பெற்றுள்ள இந்த வாய்ப்பினை உரியமுறையில் பயன்படுத்தி நீங்களும் நீங்கள் சார்ந்து வாழும் சமூகத்தின் மேம்பாட்டிற்கும் உழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், நியமனம் பெற்றுக் கொண்டவர்களுக்கு தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

இதேபோன்று, யாழ்.மாநகர சபையின் சந்தை மேற்பார்வையாளர்களாக பணிபுரியும் ஒரு தொகுதியினரும் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடினர்.

இதனிடையே யாழ்.மின்சார நிலைய வீதியில் கடைத் தொகுதிகளை அமைத்துள்ள வியாபாரிகள் தமது பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது மாநகரசபை ஆணையாளர் பிரணவநாதன், அமைச்சரின் யாழ்மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன், முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பியின் யாழ்.நகர இணைப்பாளர் துரைராசா இளங்கோ (றீகன்) உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# இந்து மயானத்தை புனரமைக்க கோரிக்கை

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கொடிகாமம் கட்டைப் பறிச்சான் இந்து மயானம் அடிப்படை வசதிகள் அற்றுக் காணப்படுவதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இம் மயானத்தை கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் தெற்கு, கொடிகாமம் மத்தி, இராமாவில் போன்ற கிராமங்களைச் சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துவதாகவும் மயானத்தில் எரிகொட்டகை, இளைப் பாறும் மண்டபம் எவையும் இல்லையெனவும் மழைகாலங்களில் மயானத்தினை பயன்படுத்துவோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

பெருந்தொகையான மக்கள் பயன்படுத்தும் மயானத்திற்கு உரிய வசதிகளை உரியவர்கள் செய்து தரவில்லையென பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (14)

# கைதடிப் பகுதியில் பார்த்தீனியம் முற்றாக அழிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கைதடிப் பகுதியில் பார்த்தீனியத்தின் வளர்ச்சி அதிகமாக காணப்படுவதாகவும் இச்செடி ஏனைய இடங்களுக்கு பரவமுன்பு சம்பந்தப்பட்டோர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிரதேச மக்கள கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைதடி சந்தி, கைதடி பிள்ளையார் கோவிலடி, கைதடி கோப்பாய் மத்தி, வடக்கு மாகாணசபை அலுவலகத்திற்கு அருகாமை என பல இடங்களிலும் தற்போது பெய்துவரும் மழைக்கு விரைவாக இச் செடிகள் முளைத்துள்ளன. கால் நடைகள் ஊடாகவே ஏனைய இடங்களுக்கு பரவுகின்றன.

மேலும் கைதடிப் பகுதியிலே வடக்கு மாகாணசபையின் அலுவலகம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (14)

# "கோடை" நாடகத்தின் வாசிப்பு அரங்க அளிக்கை

முன்னணி கவிஞர் அமரர் மகாகவி து.உருத்திரமூர்த்தியின் கவிதை நாடகமான கோடை நாடகத்தின் வாசிப்பு அரங்க அளிக்கை நிகழ்வு நேற்று மாலை 4 மணிளவில் கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. புதியதொரு வீடு நாடகத்திற்கான வாசிப்பு அரங்க நெறியாள்கையினை குழந்தை ம.சண்முகலிங்கம் மேற்கொண்டிருந்தார்.

இவ் வாசிப்பு அரங்க நிகழ்வில் "நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்களும்" நாடகத்துறை மாணவர்களும் நாடக ஆர்வலர்களும் கலந்து கொண்டார்கள். (63)

# ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி நயினாதீவில் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினத்தை இன்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக கொண்டாடுவாதற்கான ஏற்பாடுகளை வேலனை பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

அன்றைய தினம் ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் விசேட அபிஷேகம் பூசை வழிபாடுகளை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷனினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(05)

# பிரதீபா பிரபா விருது



சிறந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் "பிரதீபா பிரபா" விருதை வேலணைதுறையூரைச் சேர்ந்தவரும், வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய ஆசிரியருமான திருமதி லோகேஸவரன் அரியமலர் பெற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த மாதம் உலக ஆசிரியர் தினமன்று கொழும்பு - மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் வைத்து பிரதமர் டி.எம். ஜயரத்னவால் இவ்விருது வழங்கப் பட்டது. (21)

# 7761 விவசாயிகளுக்கு பயிர் அழிவு நஷ்டஈடு

கடந்த ஆண்டு பயிர் அழிவால் நஷ்டமடைந்த யாழ். மாவடடத்தைச் சேர்ந்த 7761 விவசாயிகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக கமநல சேவைகள் நிலையப் பணிப்பாளர் பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட விவசாய சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தொடர்ந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவு அவர்களது வங்கிக் கிளைகளில் வைப்பிலிடப் பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் பதிவுகளின் அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (பா)

# மிளகாய் நாற்றுமேடைகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி பகுதியில் வளலாய், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி போன்ற பகுதிகளில மிளகாய் நாற்றுமேடைகள் அமைக்கும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

வெங்காயச் செய்கையினை மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் தமது வெங்காயப் பயிர்களுக்குள் நாட்டுவதற்கும் மற்றும் தனி மிளகாய் செய்கையினை மேற்கொள்ளவுள்ளோருமே இவ்வாறு மிளகாய் நாற்று மேடைகளை அமைத்து வருகின்றனர்.

தற்போதுள்ள காலநிலையால் மிளகாய் நாற்றுக்கள் நல்ல நிலையில் காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (85)

# கிளிக்கூண்டு இரண்டாமிடம்

மாகாணமட்ட சிறுவர்நாடகப்போட்டியில் யாழ்திருக்குடும்ப கன்னியர் மட ஆரம்பப் பிரிவு மாணவர்களின் "கிளிக்கூண்டு" சிறுவர் நாடகம் இரண்டாம் இடத்தைப்பெற்றது.

ஆசிரியர்,ஜோண்சன்ராஜ்குமார் எழுதிய இந்நாடகத்தினை ஆசிரியர்களான ஜெயகாந்தன்,தனுஷாந்த் ஆகியோர் நெறிப் படுத்தினர்.

தற்போது சிறுவர் நாடகம் பழைய சிந்தனைகளுடனேயே இறுகி நிற்பதும் புதிய சிந்தனைகள் நிராகரிக்கப்படுவதுமாக உள்ளதாக கலை ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (90)

# முரசின் இன்றைய பலன்



(18.11.2014 செவ்வாய்க்கிழமை)

ஐய வருஷம் கார்த்திகை மாதம் 02 ஆம் திகதி.

தசமி / சித்தம் கரிநாள்

பூரநட்சத்திரம் முற்பகல் 9.12 வரை பின் அத்தம்

இராகு காலம 03.308 - 4.38 வரை. சுபநேரம 10.38 - 02.08 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிழவாதத்தை கைவிடல், மனைவியுடன் முரண்பாடு அகன்றுவிடல். |
| ரிஷபம் | கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற அவதிப்படல், விசா கிடைத்து வெளிநாட்டில் கல்வி பயில ஆயத்தமாதல். |
| மிதுனம் | வாகனயோகம் கிட்டுதல், எதிர்பாராத நிகழ்வால் குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கடகம் | தாயாரின் தேக நலன் குணமடைவதால் மகிழ்ச்சி, புதிய மனையை கட்ட பண வரவு கிடைத்தல். |
| சிம்மம் | வெளியூர் பயணம் பற்றிய செய்தி வந்தடைதல், பணியைத் தொடர நோய் தடையாக இருத்தல். |
| கன்னி | நண்பனின் இழப்பினால் பணவரவு அற்றுப்போதல், நட்டத்தால் தொழிலை கைவிடும் நிலை ஏற்படல். |
| துலாம் | அனுபவமில்லாத தொழிலில் ஈடுபடல், ஏழரைச்சனியால் முயற்சி தடைப்படல். |
| விருச்சிகம் | சேமிக்கும் நிலைப்பாட்டில் இறங்குதல், வியாபாரத்தில் எதிர்பாராது நஷ்டம் ஏற்படல். |
| தனுசு | தொலைந்துபோன ஆவணம் கைக்கெட்டுதல், வேகக்கட்டுப்பாட்டால் விபத்து விலகிவிடல். |
| மகரம் | சுபகாரிய செலவுக்கு உதவி கேட்டல், வியாழ சுகம் இருப்பதினால் திருமணம் கைகூடும். |
| கும்பம் | முரண்பட்டிருந்த அதிகாரியுடன் சுமுக நிலை ஏற்படல், எதிர்பாராத நிகழ்வால் பிரச்சினையை எதிர்கொள்ளல். |
| மீனம் | பங்குத் தொழிலைக் கைவிட எண்ணுதல், நோய் குணமடைய கிரகசாந்திகள் செய்ய முயலுதல். |

# களத்திற்கு வெளியில்....

துரதிஷ்டவசமாக மீண்டும் ஒருமுறை நாங்கள் மோசமாக ஆடினோம். இந்தியா சிறப்பாக ஆடியது. இந்த ஆடுகளத்தில் 287 ஓட்டங்கள் என்ற இலக்கு போதுமானதே. ஆனால், ஹோலி நன்றாக ஆடினார். அவுஸ்ரேலிய தொடரில் இந்தியா சிறப்பாக செயற்பட வாழ்த்துகள்.

**மத்தியூஸ் (இலங்கை)**

விக்கெட்டுக்கள் சரிந்தபோது நான் கவலை அடைந்தேன். துடுப்பாட்ட வீரர்கள் மீது எனக்கு சிறியதாக கோபம் ஏற்பட்டது. சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாமல் ஆட்டமிழந்ததால் எரிச்சல் அடைந்தேன். அக்ஷர் பட்டேல் நான் கூறியதை கவனமுடன் கேட்டு விளையாடினார். இதனால் என்னால் நிலைத்து அணியை வெற்றி பெற வைக்க முடிந்தது. டோனியின் சொந்த ஊரில் ஹெலிகொப்டர் ஷொட் அடிக்க வேண்டும் என்று நினைத்தேன். அதன்படியே அந்த ஷொட்டை அடித்தது மகிழ்ச்சி அளித்தது.

**ஹோலி (இந்தியா)**

விராட் ஹோலி ஆவேசமாக விளையாடுகிறார். இளைஞராகவும் உள்ளார். கிரிக்கெட்டில் ஆர்வம் மிக்கவராக அவர் உள்ளார் என்பது தெரிகிறது. இது அணிக்கு மிகவும் நல்லது. அவரிடம் என்னைக் காண்கிறேன். எனக்கு 20-22 வயது இருக்கும் போது ஆர்வம் மிக்க இளைஞர்கள் குழுவுடன் சிறப்பாக விளையாடினேன்.

**ரவி சாஸ்திரி (இந்தியா)**

# ஹட்ரிக் பட்டம் வென்ற ஜோகோவிச்



(லண்டன்)

ஏ.டி.பி. உலக ரென்னிஸ் இறுதி தொடரில் உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஹட்ரிக் பட்டம் வென்றார்.

லண்டனில், ஆண்களுக்கான ஏ.டி.பி., உலக ரென்னிஸ் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் ஏ.டி.பி., தரவரிசை ஒற்றையர் மற்றும் இரட்டையரில் முதல் எட்டு இடங்களில் உள்ள வீரர்கள் பங்கேற்றனர். ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தகுதி பெற்றனர். முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக ரோஜர் பெடரர் விலகுவதாக தெரிவித்தார். இதனையடுத்து ஜோகோவிச் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு தொடர்ந்து மூன்றாவது முறையாக (2012-14) சம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் இத்தொடரில் ஹட்ரிக் பட்டம் வென்ற மூன்றாவது வீரர் என்ற பெருமை பெற்றார். முன்னதாக ருமேனியாவின் இலீ நாஸ்டாசே (1971-73), செக்குடியரசின் இவான் லெண்டல் (1985-87) ஆகியோர் தொடர்ந்து மூன்று முறை கோப்பை வென்றனர்.

தவிர இது, இத்தொடரில் ஜோகோவிச் வென்ற 4ஆவது பட்டம் (2008, 2012-14). இதன்மூலம் அதிக முறை கோப்பை வென்ற வீரர்கள் பட்டியலில், 3ஆவது இடத்தை ருமேனியாவின் நாஸ்டாசேவுடன் (1971-73, 75) பகிர்ந்து கொண்டார். ஆறு முறை பட்டம் வென்ற சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் (2003-04, 06-07, 10-11) முதலிடத்திலும், தலா 5 முறை கோப்பை வென்ற இவான் லெண்டல் (1981-82, 85-87), அமெரிக்காவின் பீட் சாம்பிராஸ் (1991, 94, 96-97, 99) இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

ஹட்ரிக் பட்டம் வென்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்த ஆண்டில் சிறப்பான வெற்றிகளைப் பதிவு செய்திருப்பதில் திருப்தி. அடுத்த ஆண்டும் இதேபோன்று சிறப்பாகச் செயற்படுவேன் என ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில், அமெரிக்காவின் பொப், மைக் பிரையன் ஜோடி 6-7, 6-2, 10-7 என்ற செட் கணக்கில் குரோஷியாவின் இவான் டோடிக், பிரேசிலின் மார்செலோ மெலோ ஜோடியை வீழ்த்தி, நான்காவது முறையாக (2003-04, 09, 14) சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

# மத்தியஸ்தர் மீது தாக்குதல் அணிகளுக்கு பெரும் எதிர்ப்பு

ஜாவா லேன் அணிக்கும் நந்திமித்ர அணிக்கும் இடையில் சிட்டி லீக் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற டயலொக் சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டப் போட்டியின்போது மத்தியஸ்தர் ஒருவர் தாக்கப்பட்டதை அடுத்து கால்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் கால அட்டவணைப் பிரகாரம் போட்டிகள் நடைபெறவேண்டிய மைதானங்களுக்கு கழகங்கள் சென்ற போதிலும் மத்தியஸ்தர்கள் வருகை தராததால் போட்டிகள் நடைபெறவில்லை.

பேருவளையிலிருந்து 60,000 ரூபா செலவழித்து நாவலப்பிட்டி பயணித்த சுப்பர் சன் கழகமும் கம்பளையிலிருந்து சுமார் 80,000 ரூபா செலவழித்து மாத்தறை பயணித்த க்றிஸ்டல் பெலஸும் இதனால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டன.

இது குறித்து சம்மேளன அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், மத்தியஸ்தர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறித்து தாங்கள் அறிந்திருக்கவில்லை என பதிலளித்தார்.

எனினும் சிட்டி லீக் மைதானத்தில் மத்தியஸ்தர் தாக்கப்பட்டமை, தூஷிக்கப்பட்டமை ஆகிய சம்பவங்கள் குறித்து சம்மேளனம் அறிந்திருந்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்காதது ஏன்? என கால்பந்தாட்ட விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மத்தியஸ்தர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது அவசியம் என்பதை சம்மேளனம் உணர்ந்து எதிர்காலத்தில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யவேண்டும் என விமர்சகர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

# முறியடிப்பு கடினம்


ரோகித் சர்மாவின் சாதனையைமுறியடிப்பது மிகவும் கடினம் என்று முன்னாள் இந்திய அணிக் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

ரோகித் சர்மா ஒரு நாள் போட்டியில் 264 ஓட்டங்கள் குவித்தது மிகவும் அபாரமான ஒன்றாகும். கற்பனையில் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உண்மையிலேயே இது நம்ப முடியாத ஒன்றாகும்.

ரோகித் சர்மாவின் 264 ஓட்டச் சாதனையை முறியடிப்பது கடினமானது. எந்த நேரத்திலும் இந்தச் சாதனையை முறியடிக்க இயலாது.

ரோகித்தின் அதிரடியான ஆட்டத்தால் தவான், ரஹானே ஆகியோருக்கு ஓட்டங்களை குவிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பந்து வீச்சு மோசம் கவலையில் திரிமன்னே



உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டி விரைவில் ஆரம்பமாகவுள்ளது. இவ்வேளையில் இலங்கை அணியின் பந்து வீச்சு மிகவும் மோசமாக இருக்கிறது. இது எங்களுக்கு மிகப்பெரிய கவலையை அளிக்கிறது என இலங்கை அணியின் துணைக் கப்டன் திரிமன்னே தெரிவித்துள்ளார்.

எதிர் அணியின் விக்கெட்டுக்களை வீழ்த்துவதில் நாங்கள் முன்னேற்றம் அடைய இன்னும் பயிற்சி எடுக்க வேண்டும். எங்கள் அணியின் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசவில்லை. இது நடைபெறவிருக்கும் உலகக்கோப்பை போட்டியில் இலங்கை அணிக்கு பெரிய சவாலாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்திய ஆடுகளத்தில் எங்களுடைய பந்து வீச்சு மோசமாக இருப்பது எங்களுக்கு கவலையை அளிக்கிறது. இந்திய ஆடுகளத்தில் ஓட்டங்களை கட்டுப்படுத்துவது மிகவும் கடினம்.

இந்தியாவிற்கு எதிரான தொடரில் நாங்கள் விக்கெட்டை வீழ்த்த முடியவில்லை. பந்து வீச்சாளர்களால் முதலில் விக்கெட் வீழ்த்த முடியவில்லையென்றால், கடைசி 10 ஓவர்களில் அவர்களால் என்ன செய்யமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொள்ளையர்களின் குகையாக இலங்கை கிரிக்கெட் சபை

இலங்கை கிரிக்கெட் சபை கொள்ளையர்களின் குகையாக மாற்றமடைந்துள்ளது என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் நேற்று பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு இலங்கை கிரிக்கெட் அணி விஜயம் மேற்கொண்டமை ஓர் பிழையான தீர்மானமாகும்.

இலங்கை அணி ஒருநாள் போட்டித் தொடரில் படுதோல்வி அடைந்தமைக்கான பொறுப்பினை விளையாட்டுத்துறை அமைச்சரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திட்டமிடாமல் போட்டித் தொடர்களில் பங்கேற்கக்கூடாது. இவ்வாறான தீர்மானங்களின் மூலமாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஓர் வைக்கோல் பொம்மையாகச்செயற்படுகின்றார் என்பது வெளிச்சமாகின்றது. இந்தப் போட்டித் தொடரின் மூலம் இலங்கைக்கு பணம் கிடைத்ததா? இலங்கைகிரிக்கெட் சபை இந்திய கிரிக்கெட் சபைக்கு அடிமையாகியுள்ளது என ரணதுங்க சாடியுள்ளார்.

# ஐந்தாவது இடத்தில் ஹோலி



ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சதங்களை விளாசிய வீரர்கள் பட்டியலில் ஹோலி ஐந்தாவது இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

இலங்கை அணிக்கு எதிரான ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் 139 ஓட்டங்களைப் பெற்ற ஹோலி ஒரு நாள் போட்டி வரலாற்றில் 21ஆவது சதத்தைப் பதிவு செய்தார். இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அதிக சதங்கள் எடுத்தவர்களின் பட்டியலில் பாகிஸ்தானின் சயிட் அன்வரை பின்னுக்குத்தள்ளிவிட்டு ஹோலி 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அத்துடன் இப்போட்டியில் இலங்கை கப்டன் மத்தியூஸுக்கு அடுத்தபடியாக இந்த ஆண்டில் ஒரு நாள் போட்டியில் ஆயிரம் ஓட்டங்களை ஹோலி கடந்தார். அவர் 21 ஆட்டத்தில் 4 சதம், 5 அரைச்சதம் உட்பட 1054 ஓட்டங்கள் சேர்த்துள்ளார்.

ஒரு நாள் போட்டியில் 20இற்கும் மேல் சதம் அடித்த வீரர் விபரம் வருமாறு: டெண்டுல்கர் (இந்தியா) 463 போட்டிகளில் 49 சதம், பொண்டிங் (அவுஸ்ரேலியா) 375 போட்டிகளில் 30 சதம், ஜெயசூர்ய (இலங்கை) 445 போட்டிகளில் 28 சதம், கங்குலி (இந்தியா) 311 போட்டிகளில் 22 சதம், ஹோலி (இந்தியா) 146 போட்டிகளில் 21 சதம், கிப்ஸ் (தென்னாபிரிக்கா) 248 போட்டிகளில் 21 சதம், கிறிஸ் கெய்ல் (மே.தீவுகள்) 258 போட்டிகளில் 21 சதம், அன்வர் (பாகிஸ்தான்) 247 போட்டிகளில் 20 சதம்.

# உலக கிண்ணம் யாருக்கு? எதிர்வு கூறும் யுவராஜ்



உலக கிண்ண ஒரு நாள் போட்டியில் சம்பியன் பட்டத்தை இலங்கை அல்லது அவுஸ்ரேலிய அணி கைப்பற்றும் என இந்திய அணியின் சகலதுறை ஆட்டக்காரர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண போட்டிகள் நெருங்கி வருகின்ற நிலையில் யுவராஜ்சிங் ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, 2015 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ணத்தை இலங்கை அல்லது அவுஸ்ரேலிய அணிகள் கைப்பற்றும். ஹோலி திறமையானவர். அவரது வெற்றிகளுக்கு பின்னணி அவரது உறுதியான தீர்மானமே ஆகும். இந்திய அணிக்கு டோனி, ரோகித் மற்றும் விராட் ஆகியோரின் பங்களிப்பு உலகக்கிண்ண போட்டிகளின் போது மிகவும் முக்கியமானது. இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிக்க வாய்ப்புள்ளதாக எனக்கு நம்பிக்கையுள்ளது. அடுத்த 2 மாதம் எனக்கு கடினமான காலமாக இருக்கும். உலகக்கிண்ண அணியில் இடம்பிடிப்பது பற்றி தற்போது என்னால் ஏதும் கூறமுடியவில்லை. ஆனால் வாய்ப்புக் கிடைத்தால் சிறப்பாக செயற்படுவேன். உள்ளூர் போட்டிகளில் தற்போது விளையாடி வருகிறேன். இது எனக்கு மீண்டும் அணியில் இடம்பெற வழிவகுக்கும் என யுவராஜ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விளையாட்டுச் செய்திகள்

## மைலோ கிண்ண கால்பந்து

# நான்காம் கட்டம் இன்று ஆரம்பம்

(பருத்தித்துறை)

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் நான்காவது கட்ட தகுதி காண் போட்டிகள் இன்றைய தினம் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள மைலோ கிண்ண கால்பந்தாட்டப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றி வருகின்றன. இதில் தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய பிரதேச அணிகளுக்கிடையிலான தகுதிகாண் போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் வடமராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையிலான தகுதி காண் போட்டிகள் இன்றும் நாளையும் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விலகல் முறையில் நடைபெறவுள்ள தகுதி காண் போட்டிகளில் அரையிறுதி ஆட்டத்திற்கு முன்னேறும் அணிகள் முதன்மைச் சுற்றுக்கு முன்னேறும். இன்றைய போட்டிகளில் டயமன்ஸ், மோகனதாஸ், இமையாணன் மத்தி, நியூட்டன், யங்கமன்ஸ், திக்கம் இளைஞர், நவஜீவன்ஸ், உதயசூரியன், கொலின்ஸ், வல்வை, கலைமதி, மனோகரா, பொம்மர்ஸ், அல்வாய் நண்பர்கள், மணற்காடு சென். அன்ரனீஸ், வரணி யுத், விண்மீன் ஆகிய அணிகள் மோதவுள்ளன. (எஸ்.பி.)

# இந்தியத் தொடர் கிளார்க் சந்தேகம்

(பேர்த்)

பேர்த்தில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் போது அவுஸ்ரேலிய கப்டன் மைக்கல் கிளார்க் காயமடைந்தார். இடது காலில் மீண்டும் தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு வரும் அவருக்கு காயத்தன்மை குறித்து அறிய ஸ்கான் பரிசோதனை செய்யப்பட்டது. இதில், காயம் பெரிதாக இருப்பது தெரிய வந்துள்ளதால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஏனைய போட்டிகளிலும் அவர் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்த மாதம் 4ஆம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமாகவுள்ள இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டிலும் 33 வயதான மைக்கல் கிளார்க் ஆடுவது சந்தேகம் என்று கூறப்படுகிறது.

உலக கோப்பை நெருங்கி வரும் வேளையில் அடிக்கடி காயத்தில் சிக்குவதால் கிளார்க் ஒரு நாள் போட்டி கப்டன் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என்று அங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. கிளார்க் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவுஸ்ரேலிய அணியால் உலக கோப்பையை வெல்ல முடியும் என்று அந்த அணியின் பயிற்சியாளர் டரன் லீமன் தெரிவித்துள்ளார்.

# யாழ். கல்வி வலயத்திற்கு பெருமை சேர்த்த ஆசான்கள்



(மானிப்பாய்)

ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டு விழாவில் யாழ். கல்வி வலயம் பத்து பதக்கங்களை வென்று அசத்தியுள்து.

ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதில் யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் 56-60 வயதுப் பிரிவில் கலந்து கொண்டு ஈட்டியெறிதலில் தங்கப்பதக்கத்தையும், தட்டெறிதல் மற்றும் உயரம் பாய்தலில் வெள்ளிப்பதக்கங்கள் உட்பட 3 பதக்கங்களை வென்றுள்ளார்.

யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் திருமாறன் 41-45 வயதுப் பிரிவில் 200 மீற்றர் மற்றும் 4X100 அஞ்சலோட்டம் ஆகியவற்றில் தங்கப்பதக்கத்தையும், முப்பாய்சலில் வெண்கலப் பதக்கம் உட்பட 3 பதக்கங்களை வென்றுள்ளார்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் ஆர்.மிதுலா 36-40 வயதுப் பிரிவில் 100 மீற்றரில் தங்கப்பதக்கத்தையும், 200 மீற்றரில் வெள்ளிப்பதக்கம் உட்பட 2 பதக்கங்களை வென்றுள்ளார்.

யாழ். கலட்டி மெதடிஷ்தமிஷன் த.க பாடசாலை ஆசிரியர் திருமதி.ஜீ.கருணாகலாதேவி 36-40 வயதுப் பிரிவில் தட்டெறிதல், ஈட்டியெறிதல் ஆகியவற்றில் தங்கப்பதக்கம் உட்பட 2 பதக்கங்களை வென்றுள்ளார்.

இதேவேளை, ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டதுடன் வடமாகாணத்திற்கும் பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது. (48)

# முதல் ஆட்டத்தில்

## அண்ணா, விநாயகர் மோதல்

(மானிப்பாய்)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட ஆளுநர் வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. விலகல் முறையில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை அண்ணா அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் அணியும், இரண்டாவது போட்டியில் மகாத்மா அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, போட்டிகள் நாளையும் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# நவஜீவன்ஸ் வசம் கிண்ணம்

(பருத்தித்துறை)


திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் மாலை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் கொலின்ஸ் அணியும் மோதின.

இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முற்பாதி ஆட்டத்தில் முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. பிற்பாதி ஆட்டத்தில் எதிரணி எதிர்பார்க்காத வகையில் சிறப்பானதொரு கோலை நவஜீவன்ஸ் அணி போட்டுக் கொண்டதுடன் முன்னிலையும் பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும்



முனைப்புடன் கொலின்ஸ் அணி போராடியபோதிலும் அதன் முயற்சிகள் யாவும் நவஜீவன்ஸ் அணியின் பிற்கள வீரர்களால் முறியடிக்கப்பட்டன. நிறைவில் நவஜீவன்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக நவஜீவன்ஸ் அணியின் கௌதமன், தொடர் நாயகனாக கொலின்ஸ் அணியின் விஷ்ணு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (12,98)





அரியாலையில் அமைக்கப்பட்டுள்ள கால்பந்து பயிற்சி நிலையத்தை நேற்று முன்தினம் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ பார்வையிட்டார். எதிர்வரும் 2ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ள இப்பயிற்சி நிலைய வேலைகள் குறித்து யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். இதன்போது வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்குகளின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொண்டனர். (93)

# அமேசான் - நெட்ஃப்லிக்ஸ்




- பத்ரி சேஷாத்ரி -

கடந்த சில ஆண்டுகளில் மக்களின் வாழ்க்கை முறையை முற்றிலும் மாற்றிய நிறுவனங்களாக இரண்டைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நாம் பொருள்களை வாங்கும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியது அமேசான். அதன் தாக்கம் இங்கே தற்போது குறைவு என்றாலும் அடுத்த பத்தாண்டுகளில் இணையம் வழி வர்த்தகம்தான் கோலோச்சப் போகிறது என்பது தெளிவு.

அடுத்து, திரைப்படங்கள், தொலைக்காட்சி நெடுந்தொடர்கள் என்று கேளிக்கை நிகழ்ச்சிகள் அனைத்தையும் இப்போதும் இனியும் நாம் எப்படி நுகரப்போகிறோம் என்பதை முற்றிலுமாக மாற்றியமைத்த நிறுவனம் நெட்ஃப்லிக்ஸ். இங்கே அமேசானைப் பற்றித் தெரிந்தவர்களுக்குக்கூட நெட்ஃப்லிக்ஸ் பற்றித் தெரிந்திருக்காது. ஆனால் அடுத்த பத்தாண்டுகளில் அமேசானைவிட நெட்ஃப்லிக்ஸ்தான் இங்கே அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அமேசான், நெட்ஃப்லிக்ஸ் என்றால் அந்த இரண்டு நிறுவனங்கள் மட்டுமல்ல. அவைபோன்ற, அவற்றின் வழிமுறையில் தொழிலில் இறங்கியிருக்கும் பிற நிறுவனங்களும்தான். ஆனால், இந்த இரண்டும் அவரவர் துறையில் முன்னோடிகள் என்பதால் அவர்கள்தான் தம் துறையின் பாதையைக் கட்டியமைக்கிறார்கள்.

மக்கள் வாங்கும் அனைத்துப் பொருள்களையும், அவர்கள் வீட்டில் இருந்தபடியே ஒரு க்ளிக்கில் வாங்க, பொருள்கள் அவரவர் வீடுகளுக்குக் போய்ச் சேரும் இணைய வணிக முறையை அமேசான்தான் உயர்ந்த இடத்துக்குக் கொண்டுசென்றது.

இது நிகர விற்பனை பற்றியதல்ல. அதன் அடிப்படையில் இருக்கும் தொழில்நுட்பம், வாடிக்கையாளர் தகவல்களிலிருந்து அவர்களுடைய விருப்பத்தைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றாற்போல பொருள்களை அவர்களிடம் கொண்டுசேர்ப்பது, பிற போட்டியாளர்களைவிட வாடிக்கையாளரின் தேவையை மிகச் சரியாக நிறைவேற்றுவது என்று பலவற்றைச் சொல்லலாம்.

சோனி போன்றோர் மின்புத்தகங்களை அறிமுகப்படுத்தினாலும் அமேசானுக்கு மட்டும்தான் அதனை எப்படி வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியும் என்பது தெரிந்திருந்தது.

இன்று கிண்டில் மின்புத்தகப் படிப்பான் கருவிக்குப் போட்டியாக சந்தையில் சொல்லிக்கொள்ளும் வகையில் ஒன்றுமே இல்லை. இது வெறும் கருவி வடிவமைப்பு பற்றியது மட்டுமல்ல. புத்தகம் படிப்பவர்களின் மனத்தைப் புரிந்து அவர்களுடைய தேவையை மிகச் சரியாக வடிவமைப்பது, அவர்கள் விரும்பும் அனைத்துப் புத்தகங்களையும் அவர்களிடம் கொண்டுசேர்ப்பது என அனைத்தையும் உள்ளடக்கியது.

அமேசானை உருவாக்கியவர் ஜெஃப் பேய்சோஸ். அமேசான், லாபத்தைப் பற்றிக் கவலைப்படாமல் நடக்கும் கம்பெனி. அது தன் பணத்தையெல்லாம் மேற்கொண்டு தொழிலில் முதலீடு செய்துகொண்டே வருகிறது.

இணைய வர்த்தகத்துக்கு அமேசான் எப்படியோ, திரைப்படங்களுக்கு நெட்ஃப்லிக்ஸ் அப்படிப்பட்டது. பார்ன்ஸ் அண்ட் நோபிள்ஸ் என்ற புத்தகக் கடைச் சங்கிலியை இணைய வர்த்தகத் திறனால் அழித்து வளர்ந்தது அமேசான். பிளாக்பஸ்டர் என்ற வீடியோ வாடகைக் கடைச் சங்கிலியை அழித்து வளர்ந்தது நெட்ஃப்லிக்ஸ்.

நம் நாட்டில் ஒரு கட்டத்தில் தெருவுக்குத் தெரு ஒரு வீடியோ வாடகைக் கடை இருந்தது. வி.எச்.எஸ் கஸட்களை வாடகைக்கு எடுத்துவந்து வீடியோ பிளேயர்மூலம் படம் பார்த்துவந்தோம். அமெரிக்காவில் இப்படிப்பட்ட பல சிறு சிறு கடைகள் இருந்தன. இவற்றுக்கிடையே, பிளாக்பஸ்டர் என்ற சங்கிலி நாடு முழுதும் பரந்துவிரிந்த ஒரு வீடியோ வாடகைக் கடையாக இருந்தது.

வீட்டில் இருந்துகொண்டே படம் பார்க்க விரும்புவோருக்கான சேவையை நெட்ஃப்லிக்ஸ் கொடுக்க விரும்பி[illegible]. ஆனால் வி.எச்.எஸ் கஸட்டை அ[illegible] அனுப்பவது சிரமமானதாகவும் செ[illegible] அதிகம் பிடிப்பதாகவும் இருந்தது. அவர்களுடைய அதிர்ஷ்டம், டிவிடி தொழில்நுட்பம் அப்போதுதான் அறி[illegible]

---

# கே.வி. மகாதேவன்

30



- பி.ஜி.எஸ்.மணியன் -

வானம்பாடி படத்தில் மற்றொரு சூப்பர்ஹிட் பாடல் "கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்" - காதல் தோல்வியால் பெண் இனத்தையே வெறுத்து நாயகன் பாடுவது.

இந்தப் பல்லவியின் அடுத்த வரிகளாக முதலில் கவியரசர் "அவன் காதலித்து வேதனையில் சாகவேண்டும்" என்று எழுதி இருந்தார்.

பாடல் பதிவின் போது பாடலைப் பாட மறுத்துவிட்டார் டி.எம்.எஸ்.

"அழுத்தமான கடவுள் நம்பிக்கை கொண்ட நான் கடவுள் சாகவேண்டும் என்று பாடமாட்டேன். வரிகளை மாற்றிக் கொடுத்தால் தான் பாடுவேன் என்று மறுத்துவிட வேறுவழி இல்லாமல் கண்ணதாசன் "அவன் காதலித்து வேதனையில் வாடவேண்டும்" என்று வரிகளை மாற்றிக் கொடுத்தார்.

இன்றளவும் "வானம்பாடி" என்றாலே சட்டென்று நினைவுக்கு வரும் பாடலாக இந்தப் பாடல்தான் இருக்கிறது.

"ஊமைப் பெண் ஒரு கனவு கண்டாள் - அதை
உள்ளத்தில் வைத்தே வாடுகின்றாள்" - பி. சுசீலாவின் மதுரக் குரலில் இன்னொரு மகத்தான பாடல்.

"தூக்கணாங்குருவிக் கூடு தூங்கக் கண்டான் மரத்திலே" - இன்றளவும் இந்தப் பாடலின் இணைப்பிசை போலக் கொடுக்க இன்னொருவர் பிறந்துதான் வரவேண்டும்.

இப்படி எத்தனையோ பாடல்கள் இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் "வானம்பாடி" படப் பாடல்களில் என் மனதுக்கு நெருக்கமான பாடல் என்றால் அது..

எல்.ஆர். ஈஸ்வரி பாடிய "யாரடி வந்தார் என்னடி சொன்னார் ஏனடி இந்த உல்லாசம்" - பாடல்தான். "கவாலி" பாணியில் தபேலாவின் அருமையான தாளக்கட்டுடன் காஷ்மீரத்தில் பிறந்த ராகமான "பஹாடி"யில் அருமையாக மகாதேவன் அமைத்துக் கொடுத்திருக்கும் பாடல். ஈஸ்வரியின் குரல்களில் வெளிப்படும் பிருகாக்களும் குழைவுகளும் பிரமிக்க வைக்கின்றன.

"மாமாவின் இசையில் ரொம்பக் கஷ்டப்பட்டுப் பாடின பாட்டென்றால் அது "யாரடி வந்தார்" பாட்டுத்தான்" என்று எல்.ஆர். ஈஸ்வரியும் கூறியிருக்கிறார்.

அடுத்து வந்த 1963ஆம் வருடத்தில் மொத்தம் வெளிவந்த 45 தமிழ்ப் படங்களில் கே.வி. மகாதேவனின் இசையில் மட்டுமே இருபத்து மூன்று படங்கள் வெளிவந்தன.

அவற்றில் பெரும்பாலான பாடல்கள் பெரு வெற்றி பெற்ற பாடல்கள்.

தமிழ் - தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் தயாரானது ஒரு புராணப் படம்.

என்.டி.ராமராவ், அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன், எம்.ஆர்.ராதா, மனோரமா, கே.விஜயன் கண்ணாம்பா, சந்தியா, வி. நாகையா நடித்திருந்தனர். படத்தின் தெலுங்குப் பதிப்புக்கு இசை அமைத்தவர் கண்டசாலா. தமிழ்ப் பதிப்பிற்கு பாடல்களுக்கு கே.வி. மகா


பி.லீலா
பி.சுசீலா

தேவனும், பின்னணி இசையை கண்டசாலாவும் அமைத்தனர்.

அந்தப் படம் தான் "லவ குசா"

கே.வி.மகாதேவனின் மெட்டுக்களில் பாடல்கள் அத்தனையுமே செந்தேனாக இனித்தன.

இருபத்து நான்காயிரம் சுலோகங்களில் வால்மீகி எழுதிய ராம காவியத்தை ஐம்பத்திரண்டே வரிகளில் எளிமையாக மிக எளிமையாக மக்களிடம் - அதுவும் பண்டிதர் முதல் பாமரர் வரை சென்றடையும்படி எழுதுவது என்பது மகத்தான ஒரு சாதனை. அந்தச் சாதனையை அனாயாசமாகச் சாதித்துக் காட்டியிருந்தார் கவிஞர் மருதகாசி. அந்தப் பாடல் தான் இன்றளவும் "லவகுசா" என்ற பெயர் சொன்ன மாத்திரத்திலேயே உதடுகளில் வந்து ஒட்டிக்கொள்ளும் பாடலான "ஜெகம் புகழும் புண்யகதை ராமனின் கதையே" பாடல்.

பாடலை மகாதேவன் அமைத்திருக்கும் விதம்! ஹிந்தோளம், சிந்துபைரவி, சிவரஞ்சனி, காபி ஆகிய ராகங்களை அருமையாக கோர்த்து ஒரு ராக மாலையே தொடுத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

பி. சுசீலாவும் - பி.லீலாவும் வெகு அற்புதமாக பாவத்துடன் பாடி இருக்கின்றனர்.

சீதாதேவியைக் காட்டுக்கு லக்ஷ்மணன் கொண்டுவிடும்போது பின்னணியில் அசரீரியாக டி.எம். சௌந்தரராஜனின் குரலில் ஒரு அருமையான பாடல் ஒலிக்கும்.

"இன்றும் இல்லை அன்றும் இல்லை என்றுமே இல்லை
இங்கும் அங்கும் விதியை வென்றோர் எவருமே இல்லை." - விதியின் வலிமையைப் பறைசாற்றும் இந்த மருதகாசியின் பாடலில் வரிகள் ஒவ்வொன்றும் காட்சியைப் பார்க்காமலே கதையை விளங்க வைத்துவிடும்.

"திருவளர் நாயகன் ஸ்ரீராமனே" - கண்டசாலா, பி.லீலா, பி. சுசீலாவின் குரல்களில் கம்பீர நடையில் ஒரு விறுவிறுப்பான பாடல்.

"மாரிபோல கண்ணீரும் சிந்தக் காரணம் ஏனம்மா" - பி. சுசீலா, பி. லீலா.

"சந்தேகமும் ஏனம்மா" - கண்டசாலா.

"ஸ்ரீ ராம சுகுணா சீலா" - பி.சுசீலா - பி. லீலா.

"ஈடு இணை நமக்கு ஏது" - மோகனத்தில் ஒரு கம்பீரமான பாடல்.

"ஸ்ரீ ராம பரந்தாமா" - பி.சுசீலா, பி.லீலா, ஏ.பி. கோமளாவின் குரல்களில்.

இந்தப் படத்தைப் பொறுத்தவரையில் இணைப்பாடல்களில் பி.சுசீலா, பி.லீலா இருவரின் குரல்களுமே இனம் பிரித்துக் காண முடியாதபடி ஒன்றிப்போய் கணீரென ஒலிக்கும் வண்ணம் பாடவைத்த சிறப்பு கே.வி. மகாதேவனைச் சாரும்.

இப்படித் தமிழ் தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் செயல் படத் துவங்கிய காலகட்டத்தில் சிறப்பான பாடல்களை இவரால் எப்படிக் கொடுக்க முடிகிறது என்று வியக்கும் அளவுக்கு மகாதேவனின் பாடல்கள் அமைந்தன.

(தொடரும்)

முகமானது. திரைப்பட நிறுவனங்கள் தம் படங்களை டிவிடியில் வெளியிட, நெட்.'.ப்லிக்ஸ் டிவிடியை வாடகைக்கு தர ஆரம்பித்தது.

சாதாரண டிவிடி வாடகைத் தொழிலை வேறு யாரேனும் நெட்.'. ப்லிக்ஸைவிடச் சிறப்பாகச் செய்திருக்க முடியாதா? ஏன் அமேசானே செய்திருக்க முடியாதா? அமேசான் முயற்சி செய்தது. ஆனால் வெல்ல முடியவில்லை. ஏனெனில் நெட்.'. ப்லிக்ஸ் இரண்டு, மூன்று அருமையான திட்டங்களைக் கொண்டுவந்திருந்தார்கள்.

அதற்குமுன்புவரை ஒவ்வொரு டிவிடியையும் வாடகைக்கு எடுக்கும்போது அதற்குப் பணம் செலுத்த வேண்டும். பின்னர் குறிப்பிட்ட தினத்தில் அதனைத் திருப்பித் தராவிட்டால் அபராதம் விதிக்கப்படும். நெட்.'.ப்லிக்ஸ் இவற்றை ஒழித்தது. அபராதமே கிடையாது. மாதம் குறிப்பிட்ட தொகையைச் செலுத்திவிட்டால் போதும். வேண்டிய டிவிடிக்களை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஒரே நேரத்தில் அல்ல. இரண்டு அல்லது நான்கு டிவிடிக்களை எடுத்து, பார்த்துவிட்டு, திரும்ப அனுப்பினால் அடுத்து உங்கள் தேர்வு உங்கள் வீட்டுக்கு வந்துவிடும். நீங்கள் பார்த்துவிட்டு அனுப்ப அனுப்ப, உங்கள் வீட்டுக்கு அடுத்த டிவிடிக்கள் வந்துகொண்டே இருக்கும். இந்த கியூ வரிசை முறை வாடிக்கையாளர்களை மிகவும் கவர்ந்தது.

அடுத்தது சினிமட்ச் என்னும் மிகச் சிக்கலான ஒரு கணக்குமுறை. நீங்கள் எம்மாதிரியான படத்தைப் பார்க்கிறீர்கள் என்பதைக் கொண்டு, அ●போன்ற படத்தைப் பார்க்கும் பலர் வேறு எந்தெந்தப் படங்களையும் பார்க்கிறார்கள் என்பதை வைத்து, நீங்கள் அடுத்து இந்த இந்தப் படங்களையெல்லாம் பார்க்கலாம் என்ற பரிந்துரையை முன்வைக்கும் ஒரு அல்காரிதம். இதுவும் வாடிக்கையாளர்களை மிகவும் கவர்ந்தது.

டிவிடி வாடகை என்று தொழிலை ஆரம்பித்தாலும், இணையம் வழியாக ஸ்ட்ரீமிங் செய்ய முடியும் என்று கணித்தவுடனேயே தன் தொழிலை மாற்றிக்கொண்டு முன்னேறியது நெட்.'. ப்லிக்ஸ். மாறாக, பழைய தொழிலையே கட்டிக்கொண்டு அழுத ப்ளாக்பஸ்டர், அல்லது அதுபோன்ற வீடியோ வாடகைக் கம்பெனிகளெல்லாம் அழிந்துபோயின.


ப்ரோட்பாண்ட் இணைப்பு வெகு சீக்கிரமே ஒவ்வொரு வீட்டுக்கும் வந்துவிடும். தற்போதைய நெட்.'.ப்லிக்ஸ் போன்ற ஸ்ட்ரீமிங் வீடியோ சேவைதான் ஒரே வழி.

கிரெடிட் கார்ட் இல்லாவிட்டாலும் மக்கள் அருகில் ஏரிடத்தில் மாதக் கட்டணத்தைச் செலுத்துவதாக வைத்துக் கொள்ளலாம். மாதம் 300 அல்லது 400 ரூபாய்க்கு, வேண்டிய படத்தை வேண்டியபோது பார்த்துக்கொள்ளலாம். புதுப்படம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு வீட்டுக்குவரும். இப்படி இருந்தால் கண்ணை மூடிக் கொண்டு இந்தத் தொழில் ஜெயிக்கும்.

கவனியுங்கள், இந்தப் படங்களுக்கு நடுவே விளம்பரக் குப்பைகள் எவையும் இருக்காது. விட்ட இடத்திலிருந்து எப்போது வேண்டுமானாலும் மீண்டும் பார்த்துக்கொள்ளலாம். எச்.டி தரத்தில் படங்களைத் தர முடியும். முதலில் பெரு நகரங்கள், பிறகு சிறு நகரங்கள், அடுத்து சின்ன சின்ன கிராமங்களுக்குக்கூட 4ஜி சேவை பரவப் பரவ நல்ல பாண்ட்விட்த் கிடைத்துவிடும்.

இதனால்தான் அமேசானைவிட நெட்.'.ப்லிக்ஸ் இங்கு பெரும் தாக்கத்தைச் செலுத்தும் என்று நான் நம்புகிறேன். நாம் படிக்கும் நாடு கிடையாது. பார்க்கும் நாடுதான்.

# காய்ந்த இலை காட்டிய ஞானம்



ஞானம் தேடி ஒரு பெண் சமண ஆசிரமம் ஒன்றில் சேர்ந்தாள். அங்கு ஞானம் அடைவதற்கு முதல் படியாக "நீ உன்னையே உணர்வாயாக" என்றனர். அது அவளுக்குப் புரியவில்லை. அவளுக்கு எப்படி போதிப்பது என்று அங்கிருந்தவர்களுக்கும் தெரியவில்லை.

ஒருநாள் அவள் ஒரு மரத்தடியில் அமர்ந்து இருந்த போது காய்ந்த இலை ஒன்று மரத்திலிருந்து உதிர்வதைக் கண்டாள். அதையே பார்த்துக் கொண்டிருந்த அவள் திடீரென ஆடிப்பாட ஆரம்பித்தாள். அவள் ஞானம் அடைந்து விட்டாள்.

ஆசிரமத்தில் இருந்த மற்றவர்கள், "என்ன படித்தீர்கள்? எந்த சாத்திரம் கற்று நீங்கள் ஞானம் அடைந்தீர்கள்? அதை எங்களுக்கும் சொல்லிக் கொடுங்கள். நீண்ட காலமாக நாங்களும் என்னென்னவோ படித்தும் ஞானம் அடைய முடியவில்லை. ஆனால் நீங்கள் குறுகிய காலத்தில் எதையும் படிக்காமலேயே ஞானம் அடைந்து விட்டீர்களே...!" என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

அந்தப் பெண், "எதையும் படித்து நான் கற்றுக் கொள்ளவில்லை. மரத்திலிருந்து காய்ந்த இலை ஒன்று விழுவதைக் கண்டேன். என் ஆசை நிறைவேறி விட்டது" என்று சொன்னாள்.

மற்றவர்கள், "நாங்களும்தான் மரத்திலிருந்து இலைகள் விழுவதைப் பார்க்கிறோம். அது உன்னை மட்டும் எப்படி பாதித்தது?" என்று கேட்டனர்.


அவள் சொன்னாள், "ஒரு காய்ந்த இலை விழுவதைப் பார்த்ததும் என்னிலிருந்து ஏதோ கீழே விழுந்தது. இன்று இல்லாவிட்டாலும் நாளையாவது நானும் இந்த இலையைப் போல விழுந்து விடுவேன் என்பதைப் புரிந்து கொண்டேன். பின் எதற்குப் பெருமை, கர்வம் எல்லாம்? காய்ந்த இலையைக் காற்று உதைத்து எல்லாத் திசைகளிலும் மாறி மாறி அடித்துச் செல்வதைக் கண்டேன். நாளை அது சாம்பலாகிவிடும். நானும் அந்த இலையைப் போன்றே அலைவேன். இன்றிலிருந்து நான் இங்கில்லை. இதை அந்த காய்ந்த இலையிலிருந்து கற்றுக் கொண்டேன்."



ஹொலிவுட் சூப்பர் ஸ்டாரும், சிறந்த உடல் கட்டமைப்புக்கான மிஸ்டர் ஒலிம்பியா பட்டத்தை ஆறு முறை தட்டிச் சென்றவருமான, ஆர்ணோல்ட் ஸ்வாஸ்நேகருக்கு, அமெரிக்காவின் ஓஹாயா மாகாணத்தில், பிரமாண்ட வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு நடந்த விளையாட்டுக் கண்காட்சியின்போது, தன் சிலையை, தானே திறந்து வைத்த ஆர்னோல்ட், அந்த சிலையை ஆச்சர்யத்துடன் பார்த்து ரசித்தார். எட்டு அடி உயரம் உடைய இந்தச் சிலை, 273 கிலோ எடை உடையது.

## ஆர்னோல்டுக்கு வெண்கலச்சிலை!

## பள்ளத்தில் வீழ்ந்திருப்போரின் பாடகற்றும் தலைமையை அறி!



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....



இலங்கை எண்டது 74 வீத சிங்கள மக்களைக் கொண்ட நாடு. இந்த நாட்டிலை ஆட்சியிலை இருக்கிற அரசாங்கங்களோடை நல்லுறவைப் பேணியபடியே சிறுபான்மை இனங்கள் தமக்கான உரிமையளையும், அபிவிருத்தியளையும் பெறமுடியும். அப்பிடித்தான் புத்திபூர்வமாய் மலையக அரசியற் தலைவர்களும், முஸ்லிம் அரசியல் தலைவர்களும் பெற்று தங்கடை சமூகத்தை முன்னேற்றி இருக்கினை.

அபிவிருத்தி எண்டதும் சனங்களின்ரை உரிமைதான். அதை சலுகை அரசியல் எண்டு தமிழரசுக் கட்சி சொல்லுறது அபத்தமானது. எங்கடை சமூகத்தின்ரை சாபக்கேடு நீண்டகால தமிழரசு அரசியலிலை சனங்களுக்கான உரிமையளும் மறுக்கப்பட்டே வந்திருக்குது.

இடையிலை தமிழ் காங்கிரஸ் கட்சி எம்.பி. ஜீ.ஜீ.பொன்னம்பலம், அரசாங்கக் கட்சி எம்.பி. செல்லையா குமாரசூரியர் ஆகியோர் அமைச்சர்களாகி சனங்களுக்கான பல நல்ல காரியங்களைச் செய்திருக்கினை. தமிழரசுக் கட்சியிலை திருச்செல்வம் அமைச்சரான போதும் சனங்களுக்கு எதுவும் செய்யேல்லை.

ஆனால் தொடராக மாறி மாறி வந்த அரசாங்கங்களோடை இணைஞ்சு செயற்பட்டு தமிழ் மக்களுக்கு அளப்பரிய பணியளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்திருக்கிறார். தர்மம் தலை காக்கும் எண்டு சொல்லுவினை. இரண்டு முறை மரணம் அவரை நெருங்கி வந்தும் தர்மம் அவரைக் காப்பாத்தினது எண்டதை இண்டைக்கும் பலபேர் சொல்லுவினை.

பாராளுமன்றத் தேர்தலிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளணி, அம்பு, சேனையளுக்கு மத்தியிலை சிங்கன் சிங்கிளாய் நிண்டு சாதிச்சதெண்டிறது இமய மலையளவுக்கு பெரிசு பாருங்கோ!

சட்டப் புத்தகங்களோடை வலம் வாற தமிழ்த் தேசியப் பெரியாக்கள் மத்தியிலை தன்னோடை சேர்ந்து நிண்ட பெடியளைக் களம் இறக்கி, அவர்களைப் பெரும் ஆற்றலாளராக மாற்றினது மட்டுமில்லை அவர்கள் மூலம் பெரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தினது முக்கியமானது.

வயித்துப் பிள்ளை வழுக்கி விழுகிற மாதிரி வாய்வீச்சுக்காரர் வாய்ச்சவடால் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருக்க, இதுதான் யதார்த்தம். இதைத்தான் செய்வோம் என்று சொல்லிச் செய்த மனிசரவர்.

தெருக்கோடியிலை கால்வயித்துக் கஞ்சிக்கு அல்லாடிக் கொண்டிருக்கிற மனிசரையும் உசுப்பேத்தி, சிங்களவன் விழுங்கி விடுவான் எண்டு பயங்காட்டி உரிமைக்காக வாக்களியெண்டு கேட்டு, அவங்கடை வாக்குகளிலை இவை சுகபோகம் அனுபவிச்சுக் கொண்டிருக்கினை. ஆனால் அதே தெருக் கோடிச் சனங்களுக்கும் கஞ்சி ஊத்திற வேலையைச் செய்து கொண்டிருக்கிறதும் டக்ளஸ்தான்.

"அமாவாசை இருட்டு. குண்டுங் குழியுமான தெரு. லைற் பொருத்திய சைக்கிளில் ஒருவன் வந்தான். அவன் வாழ்க" எண்டு ஈழக்கவிஞனொருதர் 1990களிலை ஒரு கவிதை எழுதியிருந்தார். அப்பிடியிருந்த தெருக்கள் இன்றைக்கு எப்படியிருக்குது? ஆராலே சாத்தியமாச்சுது? எண்டது ஒரு விசயம்.

அமாவாசை இருட்டான எங்கடை வாழ்க்கைக்கு லைற் பொருத்தி வந்து உதவினவர் டக்ளஸ் எண்டதும் இன்னொரு விசியம்.

குளங் கட்டிறதிலையிருந்து பாடசாலைகள், தபாலகங்கள், பொதுக் கட்டடங்கள், கோவில்கள், தொழிற்சாலைகள், சந்தைகள் என்று மூளியான வடபுலத் தாய்க்கு உருவமும் வடிவமும் கொடுத்தது அவற்றை முக்கியமான பணி.

அது மட்டுமில்லை எங்கடை பிள்ளையளின்ரை உயர் கல்வி மார்க்கங்களை உருவாக்கினது, அதுக்கான கட்டடங்களைக் கட்டி ஆளணியை இணைச்சது எண்டு பெரிய வேலையள் பலதையும் அமைதியாய் செய்திருக்கிறார்.

வடக்கு, கிழக்குக்கெண்டு விசேட பரீட்சையளை நடத்திறதிலையிருந்து பல்வேறு பதவியளுக்கும் பல ஆயிரக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் குடுத்திருக்கிறார்.

முக்கி முக்கிக் கத்தியும், ஐ.நா.விலையும், அமெரிக்காவிட்டையும் முறையிட்டும் விலகாத ஆமியை ஒவ்வொரு முறையும் ஜனாதிபதியும், அமைச்சர்களும் வரேக்கை அன்பாகச் சொல்லி விலக வச்சு சனங்களைக் குடியேத்தினவர் டக்ளஸ்தான்.

மனசைத் தொட்டு யோசிச்சுப் பாருங்கோ! 1996இலை இருந்து சனமே போகேலாமல் இருந்த இடங்கள் எத்தினை படிப்படியாய் விடுவிக்கப்பட்டதெண்டு. இண்டைக்கு அங்கை வீடும் கட்டிக் குடுத்து, வாழ்வாதார உதவியளும் செய்து அந்தச் சனங்களை நிம்மதியாய் இருக்க வச்சதை ஆரும் மறக்கேலுமே?

மக்களின் நாயகனாய் ஒரு தலைவன் இருக்க வேணுமெண்டு சொல்லுவினை. அதுக்கு ஒரே உதாரணம் டக்ளஸ் தேவானந்தாதான்.

கள்ளியளும், முள்ளியளும் கால் பதிச்சு நிண்டு கொண்டு அள்ளி அள்ளிச் சாத்திரங்கள் சொல்கையிலே வெள்ளியென வந்துதித்து, வீச்சு மிக்க கருத்துரைத்து, பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் சனங்களின் பாடகற்றி, உள்ளத் தூய்மையோடு உதவும் தலைமகனே! மக்கள் பணியொன்றே வாழ்க எண்டு நாங்களும் வாழ்த்துவம்.




# சிறந்த மாணவன்

அன்றுமாலைஆறுமுகம்பிள்ளை பள்ளியில் ஆண்டுவிழா.

பள்ளிக்கூட வளாகம் களை கட்டியிருந்தது ஆங்காங்கே மகிழ்ச்சி படர்ந்திருந்தது .வெள் ளைச் சீருடை, கறுப்புச்சப்பாத்து சகிதமாக அனைவரும் நேர்த்தி யாக வந்திருந்தார்கள்.

இந்த வருடம் பள்ளியிலேயே சிறந்த ஒரு மாணவனை தேர்ந் தெடுத்து சிறப்புப் பரிசளித்து விழாவில் கௌரவிக்கப் போவ தாக தலைமையாசிரியர் ராமச் சந்திரன் ஏற்கனவே அறிவித்தி ருந்தார்.

பத்தாம் வகுப்பு படிக்கும் மோகனும் அவனது வகுப்பு நண்பர்களும் பள்ளிவளாகத்தில்




நின்று அரட்டையடித்துக் கொண் டிருந்தார்கள்.

"டேய் மோகன்.... இந்த வரு ஷம் நம்ம பள்ளியிலேயே சிறந்த மாணவன் நீதாண்டா. அந்தச்சிறப்புப் பரிசு உனக்குத் தாண்டா..." என்றான் லோரன்ஸ்.

"அதிலென்னடா சந்தேகம்? நம்ம பள்ளியிலேயே நல்லாப்படிக்கிற சிறந்த மாணவன் நான்தான். நம்ம ஆசிரியர் எல்லோரும் என்னனைத்தான் இந்த வருடம் பொதுத்தேர்வில் மாநில அளவில் எதிர்பார்த்துக்கிட்டிருப்பாங்க. அது மட்டுமில்லாமல் விளையாட்டுப் போட்டிகளிலும் நான்தான் சிறந்தவன். கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டிகளிலும் நான்தான் சிறந்தவன் என்னை மிஞ்சுறதுக்கு இந்தப் பள்ளியில் எவன்டா இருக்கான்?

கர்வத்துடன் சிரித்தான் மோகன்.

"டேய் மோகன்... அங்கே பாரேன்..வழுக்கைத்தலை கணக்கு வாத்தியார் வர்றார்...."

கிண்டலாய்ச் சொன்னான் பாபு.

கணக்கு வாத்தியார் சண்முகத்திற்கு மோகன் மீது நல்ல அபிப்பிராயம் கிடையாது. மோகன் தனியார் மையத்தில் கணக்குப்பாடம் படித்து வருவதால் சண்முகம் வாத்தியாரை மதிக்கமாட்டான். பல சமயங்களில் செருக்குடன் நடந்து கொள்வான்.

கணக்கு வாத்தியார் சண்முகம் அந்த இடத்திற்கு வந்ததும் மோக னின் நண்பர்கள் அவரைப் பார்த்து வணக்கம் சொன்னார்கள். ஆனால் மோகன் வணக்கம் சொல்லாமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னப்பா .... எல்லோரும் இங்கே நின்று அரட்டையடிச்சுக் கொண்டு இருக்கிறீங்கள்? எங்கூடகொஞ்சம் வாங்களேன். மேடை அலங்கார வேலை பாக்கியிருக்கு" என்றார்.

சேரும் சேர்க்கை நன்றாக இருந்தால் மாணவர்களும் ஒழுங்காக இருப்பார்கள். ஆனால் மோகனின் நண்பர்கள் அனை வரும் தலைக்கனம் பிடித்தவர்கள்.

அவர்கள் கணக்கு வாத்தி யாரின் பேச்சைச் செவிமடுக் காமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"அய்யா... எங்களுக்கு வேற வேலையிருக்கு நாங்க வரலை. மேடை அலங்கார வேலையை வேற மாணவர்களை வைத்துப் பார்த்துக்குங்க.." அலட்சியமாகச் சொன்னான் மோகன்.

கணக்கு வாத்தியாருக்கு மோகனின் அகங்காரமான பதில் சங்கடத்தைத் தந்தது. அவர் எதுவும் பேசாமல் ஒரு முறைப்பு முறைத்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார்.

மோகனின் தந்தை ரவிச்சந்தி ரன் அவ்வூரில் பெரும் தொழில திபர் எனவே மோகன் செய்யும் குறும்புத்தனத்தை ஆசிரியர்கள் பெரும்பாலும் கண்டுகொள்வ தில்லை.

அந்தப்பள்ளியில் ஆண்டு விழாவிற்கு மோகனின் தந்தை ரவிச்சந்திரன், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பாக தலைமை தாங்கினார்.

விழாவில் பலதரப்பட்ட போட்டிகள் நடைபெற்றன. பாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி, கரகாட்டம், சிலம்பாட்டம், மிமிக்ரிசெய்தல், மாறுவேடப் போட்டி போன்றவை நடை பெற்றன.

போட்டி முழுவதும் மேடையி லேயே அறிவிக்கப்பட்டு பரிசளிக் கப்பட்டன. பெரும்பாலான போட்டிகளில் மோகன்தான் பரிசு பெற்றான்.

விழாவின் இறுதிக்கட்டமாக இந்த ஆண்டில் பள்ளியின் சிறந்த மாணவனுக்குச் சிறப்புப் பரிசு வழங்கிப் பேச தலைமை யாசிரியர் ராமச்சந்திரன் தன் இருக்கையை விட்டு எழுந்தார்.

அந்தப் பள்ளியே மோகனைப் பெருமையோடு பார்த்தது. அவன் கர்வத்துடன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தான்.

தலைமை ஆசிரியர் ஒலி பெருக்கியின் முன்னால் வந்து கனத்த செருமலுடன் தன் பேச்சை ஆரம்பித்தார்.

"அன்புள்ள மாணவர்களே...

இந்த வருடம் நம் பள்ளியின் சிறந்த மாணவன் ஒருவனுக்குச் சிறப்புப் பரிசு வழங்கப் போவ தாக நாங்கள் ஏற்கனவே அறி வித்திருந்தோம்.

அதன்படி நம் பள்ளியில் இந்த வருடத்தின் சிறந்த மாணவனாக ஒன்பதாம் வகுப்பு "சி" பிரிவில் படிக்கும் ரகுவைத் தேர்ந்தெடுத் துள்ளோம்" என்று அவர் அறி வித்ததும் மோகன் அதிர்ச்சி யடைந்தான்.

தனக்குத்தான் சிறப்புப் பரிசு என்ற எதிர்பார்ப்பில் இருந்தவ னுக்குத் தலைமையாசிரியரின் இந்த அறிவிப்பு குத்தீட்டியாய் இருந்தது.தலைமையாசிரியர் பேச்சைத் தொடர்ந்தார்.

"நம் பள்ளியில் நன்றாகப் படிக்கக் கூடிய மாணவர் மோகன் தான் பல போட்டிகளில் அவனை மிஞ்ச ஆளில்லை. எனவே இந்த வருடம் மோக னைத்தான். சிறந்த மாணவனாகத் தேர்ந்தெடுக்க நினைத்தோம்.

ஆனால் அவன் சமீபகாலமாக ஆசிரியர்களை மதிப்பது கிடையாது. தான்தான் சிறந்த மாணவன் என்ற கர்வம் அவனுக்கு வந்து விட்டது.

ஒரு மாணவன் எவ்வளவுதான் சிறந்தவனாக இருந்தாலும் அவனிடம் தன்னடக்கம் மட்டும் எள்ளளவும் குறையக்கூடாது.

மாணவர்களிடம் நாங்கள் முதலில் எதிர்பார்ப்பது கல்வித்திறமையையோ, விளையாட்டுத் திறமையோ அல்லது கலைத்திறமையோ அல்ல.

ஒரு மாணவன் நல்ல மாணவன் என்பதை அவனது ஒழுக்கத்தை வைத்தே இந்த உலகம் எடை போடுகிறது.

ஒழுக்கத்திற்குப் பிறகுதான் கல்வி.

எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஒழுக்கந்தான் முதலில் கற்பிக்கப்படுகிறது.

அதன்படி நம் பள்ளி மாணவன் ரகு மிகவும் அமைதியான பையன். தான் உண்டு. தன் படிப்பு உண்டு என்று இருப்பவன் ஆசிரியர்களி டம் பணிவாக நடக்கக்கூடிய மாணவன் நூற்றுக்கு நூறு சதவீ தம் பள்ளிக்கு வருகை தந்தி ருக்கிறான். அவன் ஒரு நாள் கூட பள்ளிக்கு விடுமுறை எடுத்தது கிடையாது.

ஆகவே ஒழுக்கத்தில் சிறந்த மாணவனாகிய ரகுவை இந்த வருடம் நம் பள்ளியின் சிறந்த மாணவனாக தேர்ந்தெடுத் துள்ளோம்.

சிறந்த மாணவனாகிய ரகுவை மேடைக்கு வந்து பரிசைப் பெற் றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்." என்று தலை மையாசிரியர் சொன்னதும் ரகு மேடைக்குப் போய் நன்றிகூறி புன்னகையுடன் பரிசைப் பெற்றுக்கொண்டான்.மோகனும் அவனது நண்பர்களும் தலை குனிந்திருந்தார்கள்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'

# வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு யுனிசெவ் நிறுவனத்தால் உதவிகள்

(கிளிநொச்சி)

பாடசாலை செல்லும் மாணவர்களை உடைய வறிய குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நடவடிக்கையாக யுனிசெவ் நிறுவனத்தால் சுயதொழில் நன்கொடை வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 7 பிரதேச செயலர் பிரிவுகளிலும் தலா 5 பேர் வீதம் மொத்தம் 35 பேருக்கு சுயதொழில் உதவிகள் வழங்கப்பட உள்ளன.

தலா 36,000 ரூபா வீதம் இச் சுயதொழில் நன்கொடை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிற்கும் இதற்குரிய காசோலை விநியோகிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதேசசெயலரின் வழிகாட்டலைப் பெற்று சமூகசேவை உத்தியோகத்தர்கள் பயனாளிகளைத் தெரிவு செய்து வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பத்தை அனுப்பி நிதி நன்கொடையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

வழங்கப்பட்ட நிதி தொடர்பான முன்னேற்றத்தை சமூக சேவைகள் அலுவலர்கள் புகைப்பட ஆதாரத்துடன் சமர்ப்பணம் செய்வதுடன் தொடர்ச்சியாகவே மேற்பார்வைப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்

சென்ற 2012 ஆம் ஆண்டில் யுனிசெவ் அமைப்பினால் இந்த சுயதொழில் உதவித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது 243 பேர இந்த உதவியைப் பெற்றனர்.

2013 ஆம் ஆண்டில் 183 பேர் இந்த சுயதொழில் நன்கொடைகளைப் பெற்றனர். இந்த நிதி நன்கொடை மூலமாக கால்நடை வளர்ப்பு, சிறுகைத்தொழில், விவசாயம்,மீன்பிடி , சிறு வியாபாரம் போன்ற சுயதொழில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வறிய குடும்பங்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படுகிறது. (90)

## தொண்டைமானாறு பகுதியில் இறால் வளர்ப்பு பண்ணை

தொண்டைமானாறு நீர்ப்பாசன திணைக்களத்தின் நன்னீர் தடுப்பணைக்கு அருகாமையில் பிரதான வீதியாகிய சந்நிதி வீதிக்கு மேற்குப்பக்கத்தில் தனியாரின் முயற்சியில் ஓர் இறால் வளர்ப்பு பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு பரப்பளவைக் கொண்ட நிலத்தில் வட்ட வடிவில் ஏழு அடி உயரத்திற்கு மண அணைஎழுப்பப்பட்டு அதற்குள் இறால் முட்டைகள் மூலம் இறால் குஞ்சுகள் வளர்ப்புச் செய்யப் படவுள்ளதுடன் முதிர்ச்சியடைந்தவுடன் அதனை பாவனைக்கு பெற்றுக்கொள்ள கூடியதாய் இருக்கும் என சம்பந்தப்பட் டவர்கள் தெரிவித்துள்ளனர். (85)

## அகற்றப்படாத கழிவுப்பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கொடிகாமம் கச்சாய் வீதி, கொடிகாமம் வரணி வீதி மற்றும் கிராமப் புறங்களில் உள்ள வீதிகளில் கழிவுப் பொருட்கள் உரப் பைகளில் கட்டிவைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை அப்புறப்படுத்த சம்பந்தப்பட்டோர் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் நடைபெற்ற டெங்குகட்டுப்பாட்டுவாரத்தில் சேகரித்து வைக்கப்பட்ட பொருட்களே இவ்வாறு காணப்படுவதாகவும்,தமது வீடுகளிற்கு வருகை தந்த அலுவலர்களே சந்திகளில் வைக்குமாறு கூறியதாகவும் இதுவரை எடுக்கவில்லையெனவும் மழைகாலமாகையால் இவ் இடங்களில்டெங்கு நோய் தாக்கம் ஏற்படும் என்றும் கவலை வெளியிட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பிரதேச சபைவாகனம் மூலம் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி கூறியபோதும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் தெரிவித்துள்ளனர். (14)

## சிறப்புற நடைபெற்ற முதியோர் தின நிகழ்வு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக தேசிய சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தினவிழா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் கடந்த 29ஆம் திகதி வெகுசிறப்பாக நடைபெற்றது.

வரவேற்புரையை சமூக சேவைகள் உத்தியோகத்தர் பீ.சர்மிளன் நிகழ்த்தினார்.

விழாவில் சிறுவர் நன்நடத்தை திணைக்கள ஆணையாளர் ரீ .விஸ்வரூபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் வி. செல்வம், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் செல்வி. எஸ்.பூங்கோதை மாவட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி இணைப்பாளர் ஆர், அமலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற பதினொரு மாணவர்கள் பரிசில் வழங்கி பாராட்டிக்கௌரவிக்கப்பட்டனர்.

கலை, கலாசாரத்தைப் பேணும் வகையில் பட்டம் ஏற்றும் நிகழ்வில் 30 அடி உயரமான "கட்டுக்கொடி" பட்டத்தை ஏற்றிச் சாதனை நிழத்தி வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடமிருந்து பரிசிலைப்பெற்ற 93 வயதான ரீ.நவரத்தினமும் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டார். போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கும், முதியோர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (01)

## புதிய சந்தை நிர்மாணம்

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச சபையின்கீழ் உள்ள மாண்டான் கிராமத்தில் புதிய சந்தையொன்று சபை நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளது.

சபைக்குச் சொந்தமான காணியில் பல இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள இச்சந்தையின் திறப்பு விழா எதிர் வரும் தைப்பொங்கலுக்கு முன்னா இடம்பெறும் என சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (18)



யாழ். பிரதேச செயலகத்தின் அனுசரணையில் குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் கடந்த சனிக் கிழமை நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்ட சிறார்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை காணலாம். (27)

## பதிவிறக்கப் பெட்டகம்

ஜெயமோகனுடன் எனக்கு அரசியல், கலாச்சார, வாழ்வியல் நேர்மை முதலியன தொடர்பாக கடும் கருத்து வேறுபாடுகளும் விமர்சனமும் உண்டென்றாலும், அவரது பிரமிப்பூட்டும் உழைப்பை நான் எப்போதும் வியக்கிறேன். மகாபாரதம் எனக்குப் பிடித்தமான இலக்கியம். பெரும் உழைப்பை செலவிட்டு ஜெயமோகன் எழுதிவரும் வெண்முரசு ஒரு வியர்த்தமான முயற்சி என்பதே என் கருத்து.

நாற்பதுகளிலும் ஐம்பதுகளிலும் தமிழ்ப் புலவர்கள் சிலரால் பின்பற்றப்பட்டு காலாவதியாகிப் போன ஒரு இலக்கிய உரை நடையை அவர் மீட்டுருவாக்கம் செய்ய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார். இப்போது அதைப் படித்து ரசித்து மகிழும் சிலரிலும் பெரும்பாலோர் இதே படைப்பு அவர் பெயருடன் வெளியாகாமல், எழுதியவர் பேரா. அருமனை வெற்றிப்பிரியனார் என்று இருந்திருந்தால் ஓரிரு பத்திகளுக்கு மேல் படிக்கக்கூட மாட்டார்கள். அவர் அவாவுவது போல இந்தப் படைப்பு ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் நிச்சயம் காலத்தை வென்று மதிக்கப்படும் ஒரு படைப்பாக ஆகும் வாய்ப்பு மிக மிகக் குறைவு. (அதை அறிய நானும் அவரும் இருக்கமாட்டோம் என்பதே ஆறுதல்.)

அவருடைய படைப்பாற்றல் இதில் ஆங்காங்கே கீற்றுகளாகப் பளிச்சிட்டாலும், அவையெல்லாம் காபியில் போட்ட முந்திரிப்பருப்பு மாதிரி வீணாகின்றன. இதற்கு அவர் செலவிடும் உழைப்பை அவர் நான் பெரிதும் விரும்பும் மாடன் மோட்சம் போன்ற சிறுகதைகளை, காடு, பின்தொடரும் நிழலின் குரல் போன்ற நாவல்களை எழுத செலவிட்டிருந்தால், தரமான ஐம்பது சிறுகதைகளும் ஐந்து நாவல்களும் தமிழ் வாசகர்களுக்குக் கிடைத்திருக்கும். அவரிடம் இருக்கும் படைப்பாற்றலை, இந்த வெண்முரசு எழுத்துப் பணி வீணடிக்கிறது என்பதே என் வருத்தம்.

அவரிடம் தங்கள் விமர்சனத்தை, கறாராகவும் அக்கறையோடும் சொல்லக் கூடிய நண்பர் வட்டமே அவருக்கு இல்லாமல் போய்விட்டதென்றே எனக்குத் தோன்றுகிறது. திறமைசாலியான கடும் உழைப்பாளியான ஒரு படைப்பாளியை ஒரு ரசிகர் மன்ற சூழல் வீணடிப்பதைப் பற்றி சொல்லியே தீர வேண்டும் என்பதால் சொல்லிவிட்டேன். – ஞாநி

"நமக்கு கிடைக்கிற சாதாரண அனுபவங்களை விட மேலான பெரிய அனுபவங்கள் இந்த உலகத்தில் உண்டு. நீங்க அடைஞ்சிருக்கீங்க... ஒரு துளி... அன்னிக்கு அந்தப் பாட்டைப் பாடினபோது நீங்க ஏன் கண் கலங்கினீங்க? அதை தர்க்கரீதியா விளக்க உங்களால முடியுமா?

அதேபோல மகத்தான அனுபவங்கள் பூமியிலே நிறைய இருக்கு. மனுசனை எறும்பு மாதிரி, கொசு மாதிரி அற்பமா ஆக்குகிற மகத்தான அனுபவங்கள். அந்த அனுபவங்களுக்கு எந்த எல்லையும் இல்லை. நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் ஏராளமான எல்லைகளைப் போட்டுக் கொண்டு வாழ்கிறோம். என் வீடு, என் ஊர், என் நாடு, என் இனம்... மகத்தான அனுபவங்களுக்கு எல்லை இல்லை. அவை உண்மையில் எல்லைகளற்றவை... வானம் மாதிரி திறந்துகொள்கிற அனுபவங்கள். நம் மனசே பிரபஞ்சமா ஆகிற அனுபவங்கள்...

அந்தமாதிரி அனுபவங்களை அடைஞ்சவங்களை நாம் சித்தர்கள் ஞானிகள் என்று சொல்கிறோம். கவிஞர்கள் அந்த அனுபவங்களை ஓயாமல் பாடியிருக்கிறார்கள்... சினிமா பாட்டு கூட... இந்தக் காற்றினில் நான் கலந்தேன். உன் ஆடையில் ஆடுகின்றேன். நான் போகின்ற பாதையெல்லாம் உன் பூமுகம் காணுகின்றேன்... கண்ணதாசன் வரி. அவன் அந்தப் பரவசத்தை ஒரு நிமிஷமாவது அடைஞ்சிருக்கான்.

யோசிச்சுப் பார். காதல் எவ்வளவு சின்ன விஷயம்? ஒரு ஆணும் பெண்ணும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புகிறார்கள். சேர்ந்து வாழ நினைக்கிறார்கள். அவ்வளவுதானே? எதுக்கய்யா அதைப்போய் உலகம் முழுக்க ஞானிகளும் கவிஞர்களும் மாறிமாறிப் பாடியிருக்காங்க? காவியங்களா எழுதிக் குவிச்சிருக்காங்க... நம்மாழ்வார் பாடினார். குணங்குடி மஸ்தான் சாயபு பாடினார். பாரதி பாடினார்... ஏன்? அவர்களெல்லாம் முட்டாள்களா? ஒன்றும் தெரியாத பைத்தியக்காரர்களா? இல்லை.

காதலும் அந்த உச்சத்துக்குப் போகும். அப்படிப் போனால் அதுவும் எல்லைகளற்ற அனுபவம்தான்... அதுவும் ஆன்மீகம் தான்... பாரதி அதை யோகம் என்று சொன்னான்... மண்ணில் ஆன்மீகத்தோடு ஒப்பிடக்கூடிய ஒரே அனுபவம் அது தான்... கடவுளைப்பற்றி சொல்ல வந்தவனெல்லாம் காதலைப்பற்றி சொன்னது அதனாலதான்... கடவுளை மாதிரியே காதலும் எல்லைகளற்ற அனுபவம்தான்..."

– ஜெயமோகன் 'கன்னிநிலம்' நாவலில்

# வறிய நிலையிலுள்ள மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதியில் இருந்து சுமார் 35 கிலோமீற்றர் தொலைவில் அடிப்படை வசதிகள எதுவுமின்றி அமைந்திருக்கும் கள்ளிக்குளம் கிராமத்தில் சிறுவர்களின் கல்வி மற்றும் உள வளத்தை மேம்படுத்தும் நோக்குடன் சர்வோதய நிறுவனம் சிறுவர்களுக்கான மாலைநேரக்கற்றல் செயற்பாட்டை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

இக் கிராமத்தில் கல்வி கற்கும் சிறுவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளுக்கான அப்பியாசக்கொப்பிகளை பணம் கொடுத்து வாங்குவதற்குரிய வசதிவாய்ப்புக்கள் இன்றி மிகவும் க்'டத்தின் மத்தியில் கல்வி கற்கின்றனர்.

ஒரு அப்பியாசக்கொப்பியை மூன்று பகுதிகளாகப்பிரித்து மூன்று பாடங்களுக்கான குறிப்புக்களை எழுதி கல்வி கற்கும் நிலை காணப்படுகின்றது.

இந்நிலையை மாற்றியமைப்பதற்காக சர்வோதய நிறுவன ஊழியர்களினால் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சி.கஜேந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறுவர்களை நேரில்சென்று பார்வையிட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் அவர்களின் நிலை அறிந்து 75 மாணவர்களுக்கு பாடக்குறிப்புக்களை எழுதுவதற்கு தேவையான அப்பியாசக்கொப்பிகளை வழங்கி வைத்தார்.

அத்துடன் சிறுவர்களுக்கு கல்வி கற்கும் உரிமையுள்ளது அவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு எந்த உதவியாக இருப்பினும் தமது அமைப்பினூடாக செய்துதரப்படும் என்றும் சிறுவர்கள் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக சிறந்த விழிப்புணர்வு கருத்துரைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சி.கஜேந்திரகுமார் சர்வோதய நிறுவனத்தின் சிறுவர் வேலைத்திட்ட இணைப்பாளர்களான கோ. ரூபகாந் மற்றும் சி. நந்தினி ,உட்பட கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் மு.ராமதாஸ் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர்கள் உள்ளிட்ட பல சிறுவர்களும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி கல்வி வலயத்தில் 585 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 585 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படவுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் தெரிவித்துள்ளார்.

தற்காலிக இணைப்பில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடமையாற்றிவருகின்ற ஆசிரியர்கள், தற்காலிக இணைப்புக்காலம் முடிவடைந்து மாற்றலாகி செல்வதாலேயே இந்த பற்றாக்குறை ஏற்படவுள்ளதாகவும் அவர் கூறினார். கிளிநொச்சி கல்வி வலயத்துக்காக அனுமதிக்கப்பட்ட அளவுக்கு ஆசிரியர்கள் தற்போது உள்ளனர். எனினும், பாட ரீதியான ஆசிரியர்களுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இந்த நிலையில் 2015ஆம் ஆண்டு மாற்றலாகி செல்லும் ஆசிரியர்களால், 585 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை ஏற்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# இவ்வருட வாகன விபத்து 1,972 பேர் உயிரிழப்பு

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களால் 1,972 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பஸ், முச்சக்கரவண்டி, மோட்டார சைக்கிள் மற்றும் லொறி விபத்துக்களிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

சாரதிகளின் கவனயீனம் மற்றும் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வகையில் வாகனங்கள் செலுத்தப்படுகின்றமை அநேகமான விபத்துக்களுக்கு காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, குருநாகல் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் நான்கு பேர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுர்வேத வைத்தியர்களுக்கு கஞ்சா செடிவளர்க்க அனுமதி

(கொழும்பு)



பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள் சில கஞ்சா செடிகளை வளர்க்க அனுமதியளிக்கப்பட உள்ளது. இலங்கையில் கஞ்சா செய்கை தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கஞ்சா செடிகளை வளர்ப்பது மற்றும் வைத்திருத்தல் விநியோகம் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்ற செயலாகும்.

எனினும் மருத்துவ நோக்கில் கஞ்சா செடிகளை வளர்ப்பதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமென ஆயுர்வேத வைத்தியர்கள் கோரி வந்தனர்.இந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி மருத்துவ நோக்கங்களுக்காக ஒரு சில கஞ்சா செடிகளை வளர்ப்பதற்கு ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அனுமதியளிக்கப்படும் வகையிலான சட்ட மூலமொன்று விரைவில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட உள்ளது. இந்த தகவலை சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திசாநாயக்க அண்மையில் நாடாளுமன்றில் அறிவித்துள்ளார்.

இலங்கையில் 62 மசாஜ் பார்லர்களே பதிவு செய்யப்பட்டுள்ள தாகவும் நாடு முழுவதிலும் 3000இற்கும் மேற்பட்ட பார்லர்கள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மசாஜ் பார்லர்களை கட்டுப்படுத்தவும் விரைவில் நாடாளுமன்றில் சட்டம் நிறைவேற்றப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு பற்றுச்சீட்டு



அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு எதிர்வரும் காலங்களில் அவர்களுக்கான வைத்திய செலவு தொடர்பான பற்றுச்சீட்டை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் டொக்டர் பாலித மகிபால தெரிவிக்கையில்,

தற்போது மது, புகையிலை பொருட்கள் பாவனையால் அவதிப்பட்டு அரச வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கே இந்த பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது. ஆனால் எதிர்காலத்தில் அனைத்து நோயாளர்களுக்கும் இந்தப் பற்றுச் சீட்டை வழங்குவதற்கு தீர்மானிக்கப்படுள்ளது.

இவ்வாறு பற்றுச்சீட்டு வழங்கப்படுவதன் மூலம் எந்தவொரு அரச வைத்தியசாலைகளிலும் நோயாளர்களிடமிருந்து பணம் அறிவிடப்படமாட்டாது மாறாக அவர்களின் மருத்துவ செலவு எவ்வளவு என்பதனை நோயாளர்கள் தெரிந்து கொள்ளும் வகையிலேயே இது வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எழுத்தறிவு வீதத்தை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

## கல்வி அமைச்சு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வியறிவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ள கல்வி அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க கல்வி அமைச்சின் இவ்வாறான செயற்பாடு காரணமாக எதிர்காலத்தில் இலங்கையில் எழுத்தறிவு வீதமானது மேலும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கு அதிவேகப் பாதையின் நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்கும் முகமாக நாடளாவிய ரீதியில் மாணவர்களை தெளிவூட்டும் வகையில் பாடசாலை மட்டங்களில் நடைபெற்று முடிந்த சித்திர, பேச்சுப் போட்டிகளில் இறுதிச் சுற்றுப்போட்டியானது கடந்த புதன்கிழமை பெலவத்தையில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது நாட்டின் மாணவர்களின் நன்மை கருதியும் கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் ஒத்துழைப்புடன் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம் அந்த வகையில் நாடளாவிய ரீதியில் மூடப்பட்டிருந்த 300 பாடசாலைகள் மீண்டும் கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்படவுள்ளதுடன் குறித்த பாடசாலைகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கற்கைநெறிகளை பயிலும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் மாணவர்களின் அறிவுத்திறனை விருத்திசெய்யும்



முகமாக 1000 இடைநிலைப்பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்கு தொழில்நுட்ப ஆய்வு கூடங்களை அமைப்பதுடன் மேலும் 6000 பாடசாலைகள் இணையத்தின் வாயிலாக தொடர்புபடுவதோடு அவற்றுக்கு இணைய வலையமைப்புகள் நிறுவப்படவுள்ளன.

மறுபுறம், பாடசாலைகளில் கலைப் பிரிவில் கல்வி பயிலும் 51 வீதமான மாணவர்களையும் விஞ்ஞானப் பிரிவில் கல்விபயிலும் மாணவர்களையும் இணைப்பதன் முலமாக அவர்களுக்கு தொழில் நுட்பத்துடன் கூடிய விஞ்ஞானக் கல்வியில் பங்கெடுக்கும் முகமாக நெடுஞ்சாலை கள் மற்றும் கல்வி அமைச்சுக்களை இணைதது செயற்படவுள்ளதாகவும், இவ்வாறான செயற்பாடுகளினால் எதிர்காலத்தில் மிகச்சிறந்த கல்விமான்களை உருவாக்கிட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



**தேசிய தாய்சேய் நல மேன்மைக்காக வடமாகாணத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் இரண்டாம் இடத்தினை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பெற்றது. இதில் வைத்தியகலாநிதி செந்தூரன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் விருதுடன் நிற்பதனை காணலாம்**

# க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை

# G.C.E. (O/L) Examination model Paper

## வரலாறு

ஆசிரியர்:-மதிவதனன்

01 - 04 தொடக்கம் வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 விடைகளுள் சரியான விடையினைத் தெரிவு செய்க.

1) இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய " அரசுகளில் அரசியல் நிலையில் துரித வளர்ச்சி"காரணமாக அமைந்தவர்களுள் முக்கியமானவர்கள் யார்?
1) ஒல்லாந்தர் 2) போர்த்துக்கேயர்
3) பிரித்தானியர் 4) ஆரியர்கள்

2) பல்வேறு நாடுகளில் இருந்து வந்த கப்பல்களினால் இலங்கையின் 'மகாதித்த துறைமுகம் நிரம்பிருந்தது என கொலம்பஸ் என்ற பெயருடைய வெளிநாட்டவர் குறிப்பிட்டு உள்ளார். இதனால் வெளிப்படுத்தப்படும் பிரதான விடயம்.
1. கப்பல் சேவையில் இலங்கை முக்கிய இடம் வகித்தது
2. புராதன காலத்தில் உல்லாசப்பயணிகள் பெருமளவில் வந்தனர்
3. அக்காலத்தில் இலங்கை முக்கிய வர்த்தக நிலையமாக விளங்கியது
4. பருவக்காற்று நீரோட்டங்கள் என்பவற்றின் உதவியில் இலங்கை வரமுடிந்தமை

3) இலங்கையின் பிரித்தானியர் ஆட்சி தொடர்பான பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க
1. பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமை
2. கைத்தொழில், விவசாயம் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தியமை
3. அரசியல் யாப்புக்களில் வளர்ச்சி நிலை ஏற்பட்டமை
4. ஆங்கிலக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமை

4) பிரித்தானியரால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை செய்கைக்கு தேவையான காணிகளை பெற்றுக்கொணடமை பின்வரும் எவ்வழி முறையினால்?
1. தரிசு நில சட்டத்தின் மூலம் காணிகளை அரசு உடைமையாக்கியமை
2. கபாடகம், நிர்த்தகம் ஆகியவற்றை ரத்து செய்ததன் மூலம்
3. மலைநாட்டின் நிலவிய இராஜகாரிய முறையை ஒழித்து விட்டதன் மூலம்
4. காணி உரிமையாளர்களுடன் பேசி காணிகளை கொள்வனவு செய்தமை

5) மலையகப்பகுதியில் 1815 இல் ஆரம்பித்த பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக மக்கள் அதிருப்தி கொண்ட்மைக்கு காரணமாக அமைவது
1) கண்டிமக்களின் பாரம்பரியங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் பிரித்தானியா மதிப்பளித்தமை
2) ஸ்ரீவிக்கிர ராஜசிங்கன் நாடு கடத்தியமை
3) நாயக்கர் பிரித்தானியரின் அதிகாரங்களை நீக்கியமை
4) புதியவரி நடைமுறைகள் நீக்கியமை

6) இலங்கையின் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான முக்கிய ஆண்டுகள் சில நிரல் II இல் தரப்பட்டிருப்பதோடு அவற்றுக்குரிய அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள நிரல் I இல் காட்டப்பட்டுள்ளன. நிரல் I இல் உள்ள ஒழுங்கிற்கு ஏற்ப நிரல்II இல் உள்ளவற்றை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| A -சர்வஜனவாக்குரிமை வழங்கப்படல் | E-1912 |
| B- முதலாவது தேசாதிபதி நாயகம் நியமிக்கப்படல் | F - 1947 |
| C - சட்டவாக்க கழகம் ஆரம்பிக்கப்படல் | G -1833 |
| D - பாராளுமன்றம் நிறுவப்படல் | H - 1931 |
| | I - 1948 |

1) E,F,G,H 2) H,I,G,F 3) F,G,H,I 4) I,G,F,E

7) அரசியலமைப்புப் பணிகளுக்காகப் பரிதிநிதிகள் சபையும் செனற்சபையும் கொண்ட இருமன்றப் பாராளுமன்ற முறைமை முதன்முதலாக அறிமுகம் செய்யப்பட்டது
1. 1947 சோல்பரி யாப்பு 2. 1921 மனிங் யாப்பு
3. 1931 டொனமூர் யாப்பு 4. 1833 கோல்புறூக் யாப்பு

8) இலங்கையில் டொனமூர் யாப்பின்படி தேசியத்தலைவர்கள் செயற்பட்ட பணி
1. நீதி 2. நிர்வாகம் 3. நீதிமன்றம் 4. யாப்புசீர்திருத்தம்

9) A - இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படல்
B - உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகரிக்கப்பட்டமை
C - பொருளாதார துறையில் அரசின் ஏகபோக உரிமை ஒழிக்கப்பட்டமை
D - பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டமை
E - நிர்வாகக் குழுமுறை அறிமுகம்
F - இராஜகாரியமுறை ஒழிக்கப்பட்டமை
மேலே A,B,C,D,E,F என்பனவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள சிபார்சுகளின் கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள் யாவை?
1. A,C,E 2. B,D,F 3. A,C,F 4. A,B,C

10) இலங்கையில் பிரித்தானியர் மேற்கொண்ட ஆட்சிகளில் பின்வருவனவற்றில் அடங்காதது எது?
1. ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பனியின் ஆட்சி
2. இரட்டை ஆட்சி
3. முடிக்குரிய ஆட்சி
4. சனநாயக கோசலிச குடியரசின் ஆட்சி

11) திருகோணமலைத்துறைமுகத்தின் சிறப்புக்களிற்குள் பின்வருவனவற்றில் அடங்காதது எது,
1. இயற்கையான துறைமுகம்
2. பல கப்பல்களை நிறுத்தும் வசதி
3. இரு பருவக்காற்றுக்கால பகுதிக்கும் சிறந்தது
4. மறைவாக கப்பல்களை நிறுத்திவைப்பதற்கு ஏற்றதாக அமையாமை

12) கோல்புறூக் யாப்பின் பரிந்துரைகளில் அடங்காத விடயம் யாது?
1. இராஜகாரிய முறையை ஒழித்தல்
2. மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் துறை அறிமுகம்
3. 5 மாகாணங்களை உருவாக்குதல்
4. சுட்டவாக்ககழகம் உருவாக்கப்படல்

13) i ஆம் ii ஆம் மலையக ஆக்கிரமிப்புகளுக்கு தலைமை வகித்த பிரித்தானிய ஆளுநர்கள்
1) பிறவுண்ரிக் - மெயிட்லண்ட் 2) நோர்த் - பிறவுண்ரிக்
3) மெக்டோவல் - ஸ்மேலி 4) நோர்த் - கிறகரி

14) 1848 ஆம் ஆண்டின் சுதந்திரபோராட்டத்தலைவர்களுள் சிங்களவர்களின் வீர புருசுன் என அழைக்கப்படுபவர் யார்?
1. வீரபுரன் அப்பு
2. குடாபொல தேரர்
3. கொங்காலே கொடபன்டா
4. மடுகல்ல நிசாவை

15) பிரித்தானியரின் 1845 இன் உடன்படிக்கை மீறியமையால் ஏற்பட்ட விடயம் பின்வருவனவற்றில் எது?
1. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தமை
2. 1818ஆம் ஆண்டு முதலாவது சுதந்திரப்போர் கிடைத்தமை
3. 1848ஆம் ஆண்டு இரண்டாவது சுதந்திரப்போர் நடந்தமை
4. மக்கள் மன்னன் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் பக்கம் சார்ந்தமை

16) நாட்டைச் சனநாயக வழிக்கு நெறிப்படுத்திய முதல் படிமுறையாகக் கருதத்தக்க கோல்புறூக் சீர்திருத்த யோசனை பின்வருவனவற்றில் யாது?
1. சட்டசபை, நிறைவேற்று சபை ஏற்படுத்தல்
2. மலைநாட்டையும் கரையோரத்தையும் ஓரே ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்
3. உயர்நீதிமன்ற முறையை இந்நாட்டில் ஏற்படுத்தல்
4. 16 மாகாணங்களை 5 மாகாணங்களாக குறைத்தல்

17) A - உள்நாட்டு அலுவலர்களுக்குப் பதிலாக வரியைச் சேகரிப்பதற்கு அவுமில்தார்களை நியமித்தல்
B - கறுவாவிற்காக அறவிட்ட நிலையை கட்டல்
C - பணமாக வரியைச் செலுத்தும் முறையை ஆரம்பித்தல்
D - நீதிமன்ற அலுவல்களில் ஆவணங்களுக்கு அறவிடப்படும் முத்திரைக் கட்டணத்தைக் கூட்டுதல்
மேற்குறித்த விடயங்களிடையே பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக்கம்பனி கூடுதலாக வருமானத்தை பெறுவதற்காக இலங்கையில் பின்பற்றிய இருநடைமுறைகள்
A,C ஆகியன B, Cஆகியன A,B ஆகியன B,Cஆகியன

18) A - அரசுக்கழகத்தை அமைத்தல்
B - நிறைவேற்று குழு முறையை ஆரம்பித்தல்
C - இனவர்க்கப் பரிதிநிதித்துவ முறையை இரத்துச்செய்தல்
மேற்குறித்த யோசனைகள் எவ்வரசியலமைப்புப் சீர்திருத்தத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன
1) கோல்புறூக் கமரன் 2) குறுமக்கலம்
3) மணிங்டொவொன்யா 4) டொனமூர்

19) பிரித்தானியர் ஆட்சிக்கால்த்தில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் நடைபெற்ற சில ஆண்டுகள் நிரல் X இலுள்ளன. அவ்வாண்டுகளில் நடைபெற்ற சில அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் நிரல் Y யில் உள்ளன. நிரல் X ஐ நிரல் Y டன் பொருத்தமாக்கும் போது சரியான விடை யாது?

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. கி.பி.1833 | A- வரையறுத்த வாக்கினால் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தல் |
| 2. கி.பி. 1910 | B - சர்வசனவாக்குரிமை |
| 3. கி.பி.1921 | C -சட்டசபைகளை அமைத்தல் |
| 4. கி.பி. 1931 | D - மாகாணத் தேர்தல் தொகுதி முறைமையை அறிமுகஞ் செய்தல் |

1) A,B,C,D 2) B,A,D,C 3) D,A,C,B 4) C,A,D,B

20) ஸ்ரீவிக்கிரமாராஜசிங்க மன்னன் பிக்குமார்களின் ஆதரவை இழக்க பிரதான காரணம்
1) பிக்குமார்களுக்கு பதவிகளை வழங்காமை
2) பிக்குமார்களை கொலை செய்தமை
3) பொதுமக்களின் பக்கம் மன்னன் இருந்தமை
4) பிரதானிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்தமை

21) 1815 ஆம் ஆண்டு கண்டிய உடன்படிக்கையின் 10ஆம் வாசகமாக நாம் கொள்ளக்கூடியது
1. பிக்குமார்கள் மற்றும் பௌத்தமதம் பாதுகாப்பு பற்றியது
2. ஆள்பாதியின் வருமானம் பற்றியது
3. 3ஆம், 4ஆம் கோறவைகள் இணைப்புப்பற்றியது
4. மக்களின் நீதிச்சட்டங்கள் பற்றியது

22) A - ஊவா வெல்லச கலவரம்
B - பிலிமத்தலாவ கொலை
C - நோத் கண்டிய படை எடுப்பில் தோல்வீ அடைதல்
D - குடாபொல பிக்குவின் மரணம்
இவற்றுள் 1818, 1848 ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிராக இலங்கையில் ஏற்படுத்திய கலவர நிகழ்ச்சிகளுடன் மட்டும் தொடர்புபடும் சரியான விடைத்தொகுதி
(1) c,d (2) A,c (3) D,B (4) D

23) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கரை[illegible]பிரதேசங்களில் இரட்டை ஆட்சிமுறை நிலவிய காலப்பகுதி
1) 1978 - 1815 2) 1798 - 1802 3) 1796 - 1833 4) 1798 - 1818

24) A - கெப்பற்றிபொல திசாவை B - தோமஸ் மெயிற்லண்ட்
C - டொறிங்டன் D - கேர்குலிஸ் றொபின்சன்
மேற்கூறப்பட்ட விடயங்களில் இலங்கையருக்கு பாரியளவு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு நடந்து கொண்டோர்கள்
1) Aயும் Dயும் 2) Bயும் Dயும்
2) Cயும் Dயும் 4) Bயும், Cயும்

25) A - பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக இலங்கை கரையோரப் பிரதேசம் பிரகடனப்படுத்தப்படல்
B -கோல்புறூக் சீர்திருத்தம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படல்
C - இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தாழ்நிலச்சட்டங்களை முன்வைத்தல்
மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்ற ஆண்டுகளை ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் விடை
1) 1802,1815,1833 2) 1840,1815,1818
2) 1802,1833,1840 4) 1848,1833,1840

26) 1921ஆம் ஆண்டு பிரித்தானியர்களால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பின்படி உத்தியோக சார்புள்ளோரின் எண்ணிக்கை
1) 14 பேர் 2) 16 பேர் 3) 11 பேர் 4) 20 பேர்

27) இலங்கையில் கெபினட் உள்ற அமைச்சரவையை அறிமுகப்படுத்திய யாப்பு பின்வருவனவற்றுள் எது?
1) சோல்பரி 2) மனிங் 3) டொனமூர் 4) 1972ஆம் ஆண்டு 1ஆம் குடியரசுயாப்பு

28) A - கிவுலேகெதர மொகட்டால
B - பிலிமத்தலாவ
C - கெப்பற்றிபொல திசாவை
D - கொங்கொல கொட பண்டா
E - வீறபுறன் அப்பு
பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் 1818ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு தலைமை வகித்த தலைவர்களை மட்டும் காட்டும் விடைப்பகுதி
1) AD 2) AC 3) AE 4) FC

29) வரலாற்றை கற்பதன் மூலம் பெறும் அறிவைப் பயன்படுத்த வேண்டிய விதத்தை மிகச்சரியாகக் காட்டும் கூற்று பின்வருவனவற்றில் யாது?
1) இறந்தகாலத்தினூடாக நிகழ்காலத்தை விளங்கிக் கொண்டு எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு
2) இறந்தகாலத்தில் செய்த தவறுகள் மீண்டும் நிகழாதவாறு பார்த்துக்கொள்வதற்கு
3) இறந்தகாலத்தில் பெற்ற வெற்றியை மேலும் பேணுவதற்கு
4) இறந்தகாலப் புகழ் பற்றிய பெருமையை ஏற்படுத்துவதற்கு

30) ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றை கற்பதற்கான ஒரு மூலமாக மகாவம்சத்தின் முக்கியத்துவத்தை மிகச் சரியாகக் காட்டும் கூற்று யாது?
1. எழுத்துருவ மூலமாக மகாவம்சத்தில் வரும் எல்லாத் தகவல்களையும் சரியாகக் கருதலாம்
2. பண்டைய அரசர்கள் தொடர்பாகக் குறிக்கப்பட்ட தகவல்களை மாத்திரம் சரியாகக் காட்டும் மூல நூலாக மகாவம்சம் முக்கியத்துவம் வாய்ந்தது
3. மகாவம்சத்தில் வரும் பல தகவல்கள் ஏனைய மூலங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றமையால் எழுத்துருவ வரலாற்று மூல நூலாக முக்கியத்துவம் வாய்ந்தது
4. மகாநாம என்ற தேரரின் பெயரில் எழுதப்பட்டிருப்பதனால் சமய வரலாற்று தொடர்பான தகவல்களை மாத்திரம் சரியாகக் காட்டும் மூலமாக முக்கியத்துவம் வாய்ந்தது

31) புராதன நீர்ப்பாசனத் தொழில்நுட்பவியல் உன்னத அம்சமாகக் கருதப்படும் கலிங்கற்தொட்டியின் மூலம் நிறைவேற்றப்பட்ட பிரதான தொழில்
1. வாவி அணைக்கட்டிற்குக் குறுக்கே மடைக்கத்தவில் உண்டாகும் நீரமுக்கத்தைச் சமப்படுத்தல்
2. வாவியில் உள்ள மேலதிக நீரை வெளியேற்றல்
3. வாவியில் அலையடிப்பினால் வாவி அணைக்கட்டு கழுவுப்படுத்தலை தடுத்தல்
4. வாவியில் சேரும் வண்டல், கால்வாயில் பாய்தலைதடுத்தல்

32) பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு அரசியல் திட்டங்களில் இலங்கை மக்களுக்கு அரைகுறை பொறுப்பாட்சியை வழங்கிய அரசியல் சீர்திருத்தம்
1. கோல்புறூக் 2. டொனமூர் 3. சோல்பரி 4. மக்கலம்

33) இலங்கையில் உள்ள கல்பொத்த கல்வெட்டு பற்றிய கூற்றுக்களுள் சரியான கூற்று
1. இது ஒரு குகைக்கல்வெட்டாகும்
2. இது ஒரு சுவர் கல்வெட்டாகும்
3. இது ஒரு தூண் கல்வெட்டாகும்
4. இது ஒரு குன்றுக்கல்வெட்டாகும்

34) தப்ரபேன், செரன்டிப், தம்பன்னி என இலங்கையை அழைத்த அந்நிய இனத்தவர்கள் முறையே
1. கிரேக்கர் இந்தியா அராபியர்
2. கிரேக்கர் அராபியர் இந்தியர்
3. அராபியர் கிரேக்கர் இந்தியர்
4. இந்தியா கிரேக்கர் போர்த்துக்கேயர்

35) புராதனகால கண்டிய பொருளாதாரத்தில் காணப்பட்ட அம்சங்களுள் உள்ளடங்காதது
1. நுகர்வுப்பொருளாதார முறை காணப்பட்டது
2. வீட்டுத்தோட்டம் சேனைப்பயிர் செய்கைகள் முதன்மை பெற்றது
3. தேவைக்கு அதிகமான அளவு உப்பு, கருவாடு, புகையிலை என்பன கிடைத்தது
4. பணப்புழக்கம் சிறிய அளவு காணப்பட்டது

36) கி.பி1638,1796 ஆகிய ஆண்டுகளில் ஒல்லாந்தருடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திய இரு கண்டி ஆட்சியாளர்களும் யாவர்?
1. முதலாம் விமலதர்மசூரியனும் இரண்டாம் விமலதர்மசூரியனும்
2. இரண்டாம் இராஜசிங்கனும் கீர்த்தி ஸ்ரீ இராஜேந்திரனும்
3. செனரத்தும் இரண்டாம் விமலதர்மசூரியனும்
4. ஸ்ரீநரேந்திர சிங்கனும் ஸ்ரீவிஜயஇராஜசிங்கனும்

37) நிரல் X இல் இலங்கையில் ஆட்சி செய்த சில அரசர்களின் பெயர்களும் நிரல் Y யில் இவர்கள் காலத்தில் இலங்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளும் காணப்படுகின்றன. நிரல் X ஐ நிரல் Y உடன் பொருத்தும் போது சரியான விடை யாது?

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. தேவநம்பிய தீசன் | A - தந்ததாது கொண்டு வரப்பட்டமை |
| 2. வலகம்பா | B - தூபாராமாவைக்கட்டுவித்தமை |
| 3. கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன் | C - மிரிசவட்டியைக் கட்டுவித்தமை |
| 4. முதலாம் பராக்கிரமபாகு | D - திரிபிடகத்தை எழுதுவித்தமை |
| | E- மூன்று நிக்காயக்களை இணைத்தமை |
| | F- அட்டகதாபை பாளியில் மொழிபெயர்த்தமை |

1. A,C,D,E ஆகியோர் 2. B,D,A,E ஆகியோர்
3. A,B,D,E ஆகியோர் 4. A,B,C,F ஆகியோர்

38) வசபன், மகாசேனன், மகாபராக்கிரமபாகு என்ற அரசர்களின் பணிகள் தொடர்பான பொது இயல்பு யாது?
1. வெளிநாடுகளிலிருந்து பிக்குகளை அழைத்து வந்து குருப்பட்டம் அழித்தல்
2. நீர்ப்பாசனத் துறைக்கு வீரவாகத்துக்கு அளப்பரிய சேவையை அழித்தல்
3. தென்னிந்தியப் படையெடுப்புக்களிலிருந்து நாட்டைப்பாதுகாத்தல்
4. இலங்கையை ஒன்றுபடுத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளல்

39) புராதன நீர்ப்பாசன வல்லுநர்கள் நுண் சாய்வுடன் கால்வாய்களை அமைக்கையில் நுண்ணளவீட்டு முறைகளைப் பயன்படுத்தியமைக்குத் தரத்தக்க சிறந்த உதாரணம்
1. அனுராதபுர ரன்மசு தோட்டத்திற்கு நீரை வழங்கும் குடைவழி (சுருங்கை) நீர் வழித்தொகுதி
2. கலாவாவி, திசாவாவி என்பவற்றைத் தொடுக்கும் யோதகால்வாய்
3. புராதன மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்த பண்டைய கலிங்கல் தொட்டி
4. சிகிரியாக் குன்றைச் சுற்றி அமைத்த நீர் அகழி

40) இலங்கையில் போர்த்துகேய ஆட்சி தொடர்பான சரியான கூற்று யாது?
1. இந்நாட்டில் நெற்செய்கையை மேம்படுத்துவதற்கு இராசகாரிய முறைமை பயன்படுத்தப்பட்டது
2. இலங்கையில் இருந்த பாரம்பரிய பொருளாதார முறைமை போர்த்துகேய ஆட்சியின் விளைவாக மாற்றப்பட்டது
3. போர்த்துக்கேயர் 1597 இல் தர்மபால அரசர் இறந்தபின்னர் நிரந்தரமாகக் கோட்டை ஆட்சியாளர்களாயினர்
4. வர்த்தகமும் பெருந்தோட்டப்பயிர்களும் பொருளாதாரத்தின் முக்கிய சீவனோபாயமாக அமைந்தன

## தரம் - 09 இற்கான வரலாற்று வினாக்கள் (பகுதி - 01)

**ஆசிரியர்:-மதிவதனன**

1) உள்நாட்டு அலுவலர்களுக்குப் பதிலாக வரியைச் சேகரிப்பதற்கு அவுமில்தார்களை நியமித்தல்
A - கறுவாவிற்காக அறவிட்ட தீர்வையைக் கூட்டல்
B - பணமாக வரியைச் செலுத்தும் முறையை ஆரம்பித்தல்
C - நீதிமன்ற அலுவல்களில் ஆவணங்களுக்கு அறவிடப்படும் முத்திரைக் கட்டணத்தைக் கூட்டுதல்
மேற்குறித்த விடயங்களில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனி கூடுதலான வருமானத்தைக் பெறுவதற்காக இலங்கையில் பின்பற்றிய இரு நடைமுறைகள்
1. A,C ஆகியன 2. B,C ஆகியன
3. A,D ஆகியன 4. B.C ஆகியன

02) A - அரசுக்கழகத்தை அமைத்தல்
B - நிறைவேற்று குழு முறையை ஆரம்பித்தல்
C - இனவர்க்கப் பிரதிநிதித்துவ முறையை இரத்துச்செய்தல்
மேற்குறித்த யோசனைகள் எவ்வரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன
1. கோல்புறூக் கமரன் 2. குறுமக்கலம்
3. மனிங்-டெவெனியர் 4. டொனமூர்

03) இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் மிக ஒழுங்கமைந்த மிசனரிக்கல்வி முறை பின்வரும் எம்மிசனரிக் கம்பனியால் உருவாக்கப்பட்டது?
1. லண்டன் மிசன் 2. வெஸ்லியன் மெதடிஸ்த மிசன்
3. அமெரிக்கன் மிசன்

04) 1898 ஆம் ஆண்டில் இளைஞர் பௌத்த சங்கத்தை நிறுவுவதற்கு முன்னோடியாக அமைந்தவர்
1. அநாகரிகதர்மபால 2. பிரமச்சாரி வலிசிங்க ரிச்சந்திரன்
3. சேர்.டீ.பீ.ஜயதிலக்க 4. பியதாச சிறிசேன

05) 1948 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலிலிருந்து இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அரசியல்கட்சி முறைமையின் வரலாற்றை நோக்கும் போது பின்வருவனவற்றில் எவ்விரண்டு இயல்புகள் அதன் முக்கிய இயல்பு களாகும்?
A - எல்லாக்கட்சிகளும் இன அடிப்படை மீது கட்டியெழுப்பப்பட கட்சிகளாக இருத்தல்
B - பெரும்பாலான கட்சிகள் அரசாங்க அதிகாரத்தைப் பெற முடியாதிருத்தல்
C -அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை இடதுசாரிக் கட்சிகளாக இருத்தல்
D - அரசாங்க அதிகாரத்தைப் பெறுவதற்கு பெரும்பாலும் பல கட்சிகள் ஒன்று சேர்ந்து தேர்தலுக்கு முன் வருதல்

06) கல்வி அலுவலர்களின் முன்னேற்றத்திற்காகத் திரு.சீ.டபிள்யு கன்னங்கரா முன்வைத்த யோசனையாக அமையாதது
1. பாலர் பிரிவிலிருந்து பல்கலைக்கழகம் வரைக்கும் இலசவக்கல்வியை வழங்கல்
2. கல்வி நிருவாக அலுவல்களுக்காக பொதுக்கல்வித்திணைக்களத்தை நிறுவுதல்
3. பாடசாலை மாணவர்களுக்காகப் பகலுணவு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
4. பாடசாலைக் கலைத்திட்டத்தில் சமயத்தைக் கட்டாய பாடமாக மாற்றல்





கோண்டாவில் பொதுநூலக தேசிய வாசிப்பு மாத நிகழ்வாக சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கத்திற்கான கௌரவிப்பும் நூல்களின் அறிமுக வைபவமும் நேற்று முன்தினம் கோண்டாவிலில் அற்புதநர்தனை விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. இதில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மங்கள விளக்கேற்றுவதையும் விழா நாயகர் தம்பதிகள் சமேதரராய் அழைத்து வரப்படுவதையும் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம். (48)

# சூழலை பாதுகாக்கும் செயற்றிட்டத்தில் அனைவரும் ஒன்றிணைவது அவசியம்

## வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் வலியுறுத்து

(கிளிநொச்சி)

சூழலில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் இன்று மனித வாழ்வுக்கு சவாலாக அமைந்து வரும் நிலையில் சுழலை பாதுகாக்கின்ற செயற்றிட்டங்களில் முனைப்புக் காட்ட வேண்டியது அவசியம் அதற்கமைவாக இன மத அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் என வடக்குமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்

கடந்த சனிக்கிழமை 2014 ஆம் ஆண்டுக்கான தேசத்தின் நிழல் தேசிய மரநடுகைத்திட்டத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

இலங்கை நாட்டில் இன்று 22 வீதமான காடுகளே காணப்படுகின்றன அதை 35 விகிதமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையிலேயே இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அதனூடாகவே நாட்டில் சடுதியாக ஏற்பட்டுவரும் இயற்கை மாற்றங்களை சீராக்க முடியும் என்ற உயரிய கொள்கைக்கமைவாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இன்று உலகளாவிய



ரீதியில் ஏற்பட்டு வரும் கால நிலை மாற்றத்திற்கும் தீர்வு காணப்பட வேண்டுமாயின் காடுகள் மீள் நடுகைத்திட்டம் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட வேண்டும். என குறிப் பிட்ட வை.தவநாதன் கடந்த இருபத்தைந்து வருடஙகளுக்கு முன்னர் குடிநீரை சுமந்து சென்று பாவிக்கின்ற நிலை ஏற் படும் என்று எவரும் எண்ணவில்லை.

ஆனால அதற்குப் பின்னர் சடு தியாக ஏற்பட்ட சூழல் மாற்றம் இன்று குடிநீரை விலை கொடுத்து வாங்கி சுமந்து கொண்டு செல்ல வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் சுத்தமான சுவாசத்திற்கான வாயுக்களைக் கூட சுமந்துகொண்டு சென்று பாவிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே அவ்வாறான அபாயகரமான மாற்றங்களை எதிர்கால சந்ததியினர் எதிர்கொள்வதை தடுப்பதற்காக இன்றே திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டும் தவறின் எதிர்காலத்தில் மனித வாழ்க்கையே கேள்விக்குறியாகி விடும்.

எனவே இவ்வாறான நல்ல திட்டங்களை இன, மத, மொழி அரசியல் வேறுபாடுகளுக்கப்பால செயற்படுத்த வேண்டும். இதில் ஏதேனும் ஒரு காரணம் முன்னிலைப்படுத்தப்பட்டு திட்டங்கள் தடைப்படுமானால் எதிர்கால சந்ததியினருக்கு மாசுபட்ட இருண்ட யுகத்தையே கையளிக் வேண்டிவரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வரணி கலாசார மண்டபத்தின் கட்டடப் பணிகள் மீள ஆரம்பம்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி கலா சார மண்டப கட்டட பணிகள மீள வும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த ஒரு வருட காலமாக நடைபெறாமல் இருந்த கட்டட பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக் கட்டட பணிகள் நிறைவு பெற்றால் தென்மராட்சி கலாசார திணைக்களம் இந்தக்கட்டடத்தில் இயங்கும் எனவும் இப்பகுதி மக்களது கலாசார நிகழ்வுகள் மாண வர்களது கலாசாலை நிகழ்வுகளும் இடம் பெற வாய்ப்புள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (14)

# நீதிமன்ற செய்திகள்

ஒட்டுசுட்டான் பகுதியில் கோழித்திருட்டில் ஈடுபட்டுவந்தவர்களுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடுழியச்சிறை விதித்து முல்லை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்

மேற்படி வழக்கில் சட்டத்தரணி கணேஸ்வரன் ஆஜராகியிருந்ததுடன் காசு கொடுத்தே கோழியை வாங்கியதாக குறிப்பிட்ட போதிலும் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்ததையடுத்தே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது

---

புதுக்குடியிருப்பு கல்லடிப்பகுதியில் 8 உழவு இயந்திரங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற 8 பேருக்கு 150000/ரூ தண்டப்பணம் விதித்து முல்லை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக இப்பகுதியில் மணற் கொள்ளையில் சந்தேக நபர்கள் ஈடுபட்டு வந்ததாக மன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் கணேஸ்வரன், திருவருள் ஆகியோர் பொது நோக்கத்திற்காகவே மணல் ஏற்றியதாக தெரிவித்திருந்தனர். மணலை அரசுடைமையாக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார் (170)

# ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி வல்லிபுர ஆலயத்தில் பூசை

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் பிறந்த தினமான இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதிக்கு ஆசிவெண்டி சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் விசேட பூசை ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலகம் இவ்விசேட பூசைகள் ஆராதனைகளுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இன்றைய தினம் காலை 8 மணிக்கு இவ்விசேட பூசைகள் ஆராதனைகளில் முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர கலந்துகொள்வார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

# அரச ஓய்வூதியர்களின் விபரங்கள் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களது விபரங்களை பெறுவதற்காக இலங்கை ஓய்வூதிய திணைக்களம விபரம் திரட்டும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன்முதற்கட்ட நடவடிக்கையாக விபரசேகரிப்பு படிவங்கள் சகல கிராம அலுவலர் பிரிவினூடாக விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப பட்டுள்ளன.

இதற்கமைய கிராம அலுவலர்களினால் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் படிவங்களை பூர்த்தி செய்து உரிய திகதிகளில் ஒப்படைக்குமாறு ஓய்வூதியர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. (23)

# கைதடி பொதுநூலகத்தின் வாசிப்புமாத போட்டிகள்

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

**(முன்பள்ளி)**

**அபிநயப் போட்டி**

முதலாமிடம்-த.பர்மிசா-(பராசக்தி முன்பள்ளி), இரண்டாமிடம்- ச.மபிசா-(சரஸ்வதி முன்பள்ளி), மூன்றாமிடம் - ம.ஆரணி-(பராசக்தி முன்பள்ளி)

**பேச்சுப் போட்டி-**

முதலாமிடம் ஜெ.தர்சிகா (சரஸ்வதி முன்பள்ளி) இரண்டாமிடம்- வி.தர்சன் -(சரஸ்வதி முன்பள்ளி), மூன்றாமிடம் - ஜெ.ஜதுராணன் - (பராசக்தி முன்பள்ளி)

**கதைகூறல் போட்டி-**

முதலாமிடம்-சு.கஜானன்-(பராசக்தி முன்பள்ளி), இரண்டாமிடம்- சி. கிசானா(சரஸ்வதி முன்பள்ளி)

மூன்றாமிடம் - க.மதுசன்-(நவசக்தி முன்பள்ளி)

**பொது அறிவுப் போட்டி-**

**(தரம்-12,13)**

முதலாமிடம்-வி.அஜிந்தன்-(யாழ் கைதடி முத் துக்குமார சுவாமி.ம.வி),இரண டாமிடம்-ஜெ.டனிஸ் - (யாழ் கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி),மூன்றாமிடம்-சு.தயான் - (யாழ் கைதடி முத்துக்குமார சுவாமி, ம.வி ) நி.திருச் செல்வம் - (யாழ் ்கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி)

(தொடரும்...)

# கல்விச் சமூக பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவின் பணிப்புரைக்கமைய கல்வித்துறைசார் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வியியலாளர் சேவை என்பவற்றில் காணப்படும் பதவி உயர்வு, நிரந்தர நியமனம், நிலுவைக் கொடுப்பனவு போன்றவை தொடர்பில் கல்வித்துறை சார் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன் நிமித்தம், வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் பதில் பொறுப்பு உத்தியோகத்தர்களாக பதவி வகித்த ஏறக்குறைய 600 பேரை உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமனம் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கல்வி அமைச்சில் நடைபெற்று வருகின்றன.

அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கமைய, 1.7.2008 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்ற அதிபர்களுக்கான பதவி உயர்வுகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளும் ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பிற்கமைய பதவி உயர்வுகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளும் கல்வி அமைச்சில் இடம் பெறுவதுடன் நிலுவைக் கொடுப்பனவுகளை ஆசிரியர் சமூத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் கல்வி அமைச்சில் இடம் பெற்று வருவதாகவும் அவவதிகாரி குறிப்பிட்டார்.

மேலும் கல்வியியலாளர் சேவையிலுள்ளவர்களுக்கான பதவி உயர்வுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ஆசிரிய ஆலோசகர் பதவி வகிப்போருக்கான புதிய கல்வித துறைசார் சேவையொன்றும் உருவாக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் ஆசிரிய ஆலோசகர் சேவை என்ற புதிய சேவை கல்வித் துறைசார் சேவையில் சேர்க்கப்படவுள்ளது.

இது தவிர 50 ஆயிரம் ஆசிரியர் உதவியாளர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவ்வதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# அவுஸ்ரேலிய தொழில் அதிபர்களை இந்தியாவுக்கு அழைக்கும் மோடி



10 நாள் சுற்றுப்பயணமாக வெளிநாடு சென்றுள்ள பிரதமர் மோடி தற்போது அவுஸ்ரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். பிரிஸ்பேனில் ஜி-20 நாடுகள் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்ற அவர் நேற்று சிட்னி புறப்பட்டுள்ளார்.

கடந்த 1986ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவுஸ்ரேலியாவுக்கு சென்று இருந்தார். அதன் பின்னர் 28 ஆண்டுகள் கழித்து பிரதமர் நரேந்திர மோடி சென்றுள்ளார்.

சிட்னியில் ஆல்போன்ஸ் அரீனாவில் உள்ள ஒலிம்பிக் பூங்காவில் அவுஸ்ரேலியா நேரப்படி நேற்று மாலை மோடிக்கு அங்கு வாழும் இந்தியர்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.


முன்னதாக சிட்னி புறப்படும் முன்பு நேற்றுக்காலை பிரிஸபேனில் அவுஸ்ரேலிய தொழில் அதிபர்களுடன் பிரதமர் பேசிய தாவது: இந்தியாவில் தொழில் தொடங்க எனது தலைமையிலான அரசு தேவையற்ற சட்ட திட்டங்களை அகற்றியுள்ளது. தொழில் தொடங்க வசதியாக எளிய மற்றும் குறுகிய கால நடைமுறைகளை வகுத்துள்ளது. மேலும் பொருட்களை எடுத்துச் செல்ல போக்குவரத்து வசதிகள் செய்துதரப்படும்.

எங்களது தொழிற் கொள்கை வெளிப்படையான ஒளிவுமறைவற்ற மற்றும் எதிர்பார்க்கத் தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தொழில் தொடங்குவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தியுள்ளோம்.

எனவே, இந்தியாவில் தொழில தொடங்க நல்ல சூழ்நிலை உள்ளது. ஆகவே நீங்கள் இந்தியாவில் தொழில் தொடங்க வரும்படி வரவேற்கிறேன் என்றார்.

உலகச் செய்திகள்

# 18 சிரிய இராணுவ வீரர்கள் தலைதுண்டித்து படுகொலை



ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் தனிநாடு அமைத்துள்ளனர். அங்கு தங்களை எதிர்ப்பவர்கள் மற்றும் மலைவாழ் பழங்குடிகள் மற்றும் சிறுபான்மை இனத்தவர்களை கொன்று குவிக்கின்றனர்.

சிறுபான்மை இன பெண்களை கடத்திச் சென்று அடிமைகளாக விற்கின்றனர். மேலும் தங்களை எதிர்க்கும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பிணைக்கைதிகளை கடத்திச் சென்று தலை துண்டித்து படுகொலை செய்கின்றனர்.

அதை வீடியோ எடுத்து சமூக வலைத் தளங்களில் வெளியிட்டு அதிர்ச்சி ஏற்படுத்துகின்றனர். நேற்று முன்தினம் சிரியாவில் அமெரிக்காவை சேர்ந்த தொண்டு நிறுவன ஊழியர் பீட்டர் எட்வேட் காசிக் என்பவரை தலை துண்டித்து கொலை செய்தனர்.

இந்த வீடியோவை வெளியிட்டு அமெரிக்காவுக்கு அதிர்ச்சி அளித்தனர். அதே வீடியோவில் சிரியாவைச் சேர்ந்த 18 இராணுவ வீரர்களின் தலைகளை துண்டித்தும் படுகொலை செய்த கொடூர காட்சி இடம் பெற்றிருந்தது.

இவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். 18 சிரிய இராணுவ வீரர்களும் மண்டியிட்டு நிற்க கத்தியுடன் நிற்கும் தீவிரவாதிகள் அவர்களை தலை துண்டித்து கொலை செய்யும் கொடூர காட்சி இரத்தத்தை உறைய வைப்பதாக உள்ளது.

# காஷ்மீரில் துப்பாக்கிச்சூடு



காஷ்மீர் முதல்வர் வீட்டின் அருகே எல்லைப் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடாத்தியதால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

காஷ்மீர் குப்கார் வீதியில் உள்ள முதல்வர் ஒமர் அப்துல்லாவின் வீட்டின் முன்பு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எல்லைப் பாதுகாப்பு படை வீரர் ஒருவர் நேற்றுக்காலை திடீரென துப்பாக்கிச்சூடு நடாத்தினார் இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சம்பவம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்படுவதாக எல்லை பாதுகாப்புப் படை செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். சம்பவம் நடந்த போது ஒமர் அப்துல்லா வீட்டில் இல்லை. அவர் வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்திற்காக ஜம்முவில் உள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக தனது ட்விட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள ஒமர் அப்துல்லா, "எனது பாதுகாப்புப் படை மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது" என தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க பிணைக் கைதி தலை துண்டித்துக்கொலை

சிரியாவில் சமூக சேவை தொண்டு ஊழியராக பணியாற்றிய பீட்டர் எட்வேட் காசிக் (வயது-26) என்பவரை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கடத்தி சென்று சிறை வைத்திருந்த நிலையில் தற்போது அவரது தலையை துண்டித்து படுகொலை செய்தனர்.



அந்த வீடியோ நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அதில் பேசிய தீவிரவாதி. இவர் தான் பீட்டர் எட்வேட் காசிக். அவர் உங்களது அமெரிக்காவின் குடிமகன்.

தமிக் நகரில் அமெரிக்காவின் முதல் சிலுவைப்போர் வீரரான இவரை (பீட்டர் காசிக்) கொன்று புதைக்கிறோம். அதிபர் ஒபாமா சிரியாவுக்கு மேலும் அமெரிக்க இராணுவ வீரர்களை அனுப்ப வேண்டும். அவர்களின் வருகைக்காக காத்திருக்கிறோம். என ஆணவத்துடன் பேசினான்.

இதற்கிடையே அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேனில் நடந்த ஜி20 நாடுகள் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இருந்து அமெரிக்கா திரும்பிய அதிபர் ஒபாமாவுக்கு இந்தச் சம்பவம் குறித்து தெரிவிக்கப்பட்டது.

இதனால் கடும் அதிர்ச்சி அடைந்த அவர் தீவிரவாதிகள் செயலுக்கு கண்டனம் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் காசிக் மனிதாபிமானம் மிக்கவர். தீவிரவாதிகளின் இச்செயல் மிகவும் கொடூரமானது. மனித தன்மையற்ற இச்செயலை உலகம் ஏற்றுக் கொள்ளாது என்றார்.

பீட்டர் எட்வேட் காசிக் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட 5ஆவது பிணைக்கைதி ஆவார். இதற்கு முன்பு அமெரிக்காவை சேர்ந்த பத்திரிகை நிருபர்கள் ஜேம்ஸ் போலே, ஸ்டீவன் சாட்லோப், இங்கிலாந்தைச் சேர்ந்த ஆலன் ஹென்னிங், டேவிட் ஹெய்ன்ஸ் ஆகிய 4 பேர் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டுள்ளனர்.

# மெக்சிக்கோவில் விமான விபத்து சிறுமிகள் உட்பட 6பேர் பலி

மத்திய மெக்சிக்கோவின் சான் லூயிஸ் போடோசி பகுதியில் ஏற்பட்ட விமான விபத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

7 பேர் மட்டுமே பயணம் செய்யக்கூடிய சிறியரக விமானம் ஒன்று டோரோன் என்ற பகுதிக்கு புறப்பட்டது.

இந்த விமானத்தில் 15 வயது சிறுமிகள் இருவர் உட்பட 6 பேர் பயணம் செய்தனர். ஆனால் குலுதத் விக்டோரியா மாகாண தலைநகர் தமவுலிபஸ் விமான நிலையத்தில் நின்று விட்டு சென்ற போது திடீரென விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 6 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். மோசமான வானிலை காரணமாக விபத்து நடந்த இடத்துக்கு மீட்பு படையினர் சென்றடைய முடியவில்லை எனவும் விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லண்டன் பாடகிக்கு சுவிஸ் மீது காதல்



லண்டனைச் சேர்ந்த தொழில் முறை பாடகியான கிட்டி புருக்நெல் 2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள யூரோவிஷன் பாடல் போட்டியில் சுவிட்சர்லாந்தின் பிரதிநிதியாக முயன்று வருகிறார்.

2015ஆம் ஆண்டில் வியன்னாவில் நடைபெறவுள்ள யூரோவிசன் பாடல் போட்டியில் சுவிஸின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என லண்டனைச் சேர்ந்த 30 வயது பாடகி கிட்டி புருக்நெல், பாடல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இணையத்தில் நடக்கும் இந்த வாக்கெடுப்பில், கிட்டி புருக்நெல் தவிர 200இற்கும் மேற்பட்ட கலைஞர்களின் பாடலும் போட்டியில் உள்ளது.

இதையடுத்து சுவிஸ் ஒலிபரப்பு நிறுவனம் இவர்களில் இருந்து 6 நபர்களை தேர்ந்தெடுக்கும் என்றும் பின்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் சுவிஸை பிரதிநிதித்துவப்படுத்தும் இறுதி நபர் தேர்ந்தெடுக்கப்படுவார் எனவும் தெரிகிறது.

# அரசியலில் பிரவேசிக்க எனக்கு அச்சமில்லை

## ரஜினி துணிச்சல்

அரசியலில் பிரவேசிப்பதற்கு தனக்கு அச்சமில்லை என நடிகர் ரஜினி காந்த் தெரிவித்துள்ளார்.

அரசியல் குறித்து தாம் அறிந்து வைத்துள்ளதாக சென்னையில் நடைபெற்ற லிங்கா திரைப்பட இசை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் அரசியலின் ஆழமே அதற்குள் பிரவேசிப்பதற்கு தமக்கு தயக்கத்தை ஏற்படுத்துவதாக நடிகர் ரஜினிகாந்த் கூறியுள்ளதாக இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியலில் பிரவேசித்தாலும் நினைத்ததை எல்லாம் செய்ய



முடியுமா என்ற சந்தேகம் உள்ளதாக தனக்கு உள்ளதாக தெரிவித்துள்ள அவர் நாளைய சூழ்நிலையே அதனைத் தீர்மானிக்கும் எனவும் கூறியுள்ளார்.

# பாக்.வீரர்களுக்கு சீனா இராணுவ பயிற்சி இந்திய அரசு தரப்பில் மறுப்பு தெரிவிப்பு



பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் சிப்பாய்களுக்கு சீன இராணுவ வீரர்கள் பயிற்சி அளிப்பதாக இந்திய எல்லை பாதுகாப்பு படை மத்திய அரசுக்கு தகவல் தெரிவித்து உஷார் படுத்தி இருப்பதாக சமீபத்தில் தகவல் வெளியானது. இதுகுறித்து அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் இருக்கும் இந்திய வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீனிடம் நேற்று நிருபர்கள் கருத்து கேட்டனர்.

அப்போது அந்த தகவலை மறுத்த அவர், அப்படிப்பட்ட தகவல் எதையும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் பிரதமர் நரேந்திர மோடிக்கு தெரிவிக்கவில்லை என்று கூறினார்.

பிரிஸ்பேன் நகரில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை பிரதமர் மோடி சந்தித்து பேசியதாகவும், அப்போது இதுபோன்ற பிரச்சினை எதுவும் அவரது கவனத்துக்கு கொண்டு வரப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலமைப்பரிசில் பரீட்சையின் மீள்திருத்தம் செய்யப்பட்ட வெட்டுப் புள்ளி விபரம்

| | | குறைந்த புள்ளி மட்டம் | |
|---|---|---|---|
| | மாவட்டம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 03. | கொழும்பு | 157 | 152 |
| 04. | கம்பஹா | 157 | ·152 |
| 03. | களுத்துறை | 157 | 152 |
| 04. | கண்டி | 157 | 152 |
| 05. | மாத்தளை | 157 | 152 |
| 06. | நுவரெலியா | 150 | 149 |
| 07. | காலி | 157 | 152 |
| 08. | மாத்தறை | 157 | 152 |
| 09. | ஹம்பாந்தோட்டை | 153 | 142 |
| 10. | யாழ்ப்பாணம் | - | 150 |
| 11. | கிளிநொச்சி | - | 150 |
| 12. | மன்னார் | 147 | 149 |
| 13. | வவுனியா | 147 | 150 |
| 14. | முல்லைத்தீவு | 152 | 149 |
| 15. | மட்டக்களப்பு | - | 150 |
| 16. | அம்பாறை | 152 | 150 |
| 17. | திருகோணமலை | 151 | 150 |
| 18. | குருநாகல் | 157 | 152 |
| 19. | புத்தளம் | 152 | 148 |
| 20. | அநுராதபுரம் | 152 | 148 |
| 21. | பொலன்னறுவை | 152 | 150 |
| 22. | பதுளை | 152 | 149 |
| 23. | மொனறாகலை | 150 | 150 |
| 24. | இரத்தினபுரி | 153 | 148 |
| 25. | கேகாலை | 157 | 152 |

(கொழும்பு)

திருத்தம் செய்யப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

வெட்டுப் புள்ளிகள் தொடர்பான தகவல்களை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# பணம் கொடுத்து முறைப்பாடு பதிவு

## ஐ.நா. மீது அரசு சீற்றம்



(கொழும்பு)

அரசுக்கெதிரான ஆதாரமற்ற முறைப்பாடுகளை சேகரித்து பதிவுசெய்வதற்காக ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் அறிக்கையாளர்கள் பலருக்கு பணம் கொடுத்திருக்கின்றனர் என்றும், இது தொழில் நேர்த்தியற்ற தன்மையை எடுத்துக்காட்டுவதாக அரசுத்தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை குறித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புலன்விசாரணை நடவடிக்கைகள் தொழில்நேர்த்திக்கு உட்பட்ட வகையில் நடக்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் அரசாங்கம், அது குறித்த தமது அதிருப்தியை வெளியிடுவதற்காக இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐ.நா.வின் வதிவிட இணைப்பாளரான சபினே நண்டியை நேரில் சந்தித்து தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இந்த புலன்விசாரணைக்கான மனுக்களை சமர்ப்பிக்கும் இறுதி திகதியாக ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி என்று முன்னர் தீர்மானிக்கப்பட்ட நிலையில், ஏற்றுக்கொள்ள முடியாத வகையிலும், அதிகாரபூர்வமற்ற வகையிலும் அது மாற்றப்பட்டது மற்றும் அது மீண்டும் திருத்தப்பட்டது ஆகியவை குறித்து அமைச்சர் ஐ.நா. இணைப்பாளரிடம் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணையத்தில் இறுதித் திகதி ஒக்ரோபர் 30 என்றும் அது நிச்சயமானது, மாற்றப்பட முடியாதது என்று கூறப்பட்டிருந்ததாக கூறியுள்ள இலங்கை அறிக்கை, ஆனால், உள்ளூர் ஊடகம் ஒன்றுக்கான செவ்வியில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர், அந்த திகதி இறுதியானது என்ற போதிலும், சில ஆவணங்கள் சென்று சேர காலமெடுக்கும் என்பதால், அந்தத் திகதிக்கு பின்னர் அவை கிடைத்தாலும் அவை நிராகரிக்கப்படும் என்று கூறமுடியாது என்று தெரிவித்திருந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இந்த முறைப்பாடுகளை செய்வதற்கான மின்னஞ்சல் முகவரி முடிவுத் திகதிக்கு பின்னரும் மூடப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு, உள்நாட்டு ஆட்களின் ஆதரவுடன் போலியான முறைப்பாடுகள் செய்யப்படுவதற்கான முயற்சிகள் இலங்கையில் நடந்தமை குறித்தும் இலங்கை அரசாங்கம் கவலையடைந்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருப்பதாக அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அதற்கு ஏதுவாக வெற்றுப் பத்திரங்களில் கையெழுத்து பெறும் நடவடிக்கைகளும், முறைப்பாடுகளுக்கு பிரதிபலனாக பணம் கொடுக்கும் நடவடிக்கைகளும் இலங்கையில் நடந்ததாக அந்த அறிக்கை கூறுகின்றது.

அதேவேளை முன்னர் அறிவிக்கப்பட்ட திகதி மாற்றப்பட்டதற்கான உரிய காரணம் ஐ.நா. பேச்சாளரால் இதுவரை கூறப்படவில்லை என்றும் அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

### புலிகளுக்கு...

கொடுத்துள்ளார் எனவும் அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகவும், நோர்வே அரசாங்கம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் விதமாக எரிக் சொல்ஹெய்ம் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே, அவர் தன்மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கிறார்.

## இப்படியும் ஒரு சங்கதி




மானிப்பாய் சந்தைக்கு முன்பாகச் செல்லும் முத்துத்தம்பி வீதியில் இப்படி வாசகங்கள் எழுதப்பட்டு காகித அட்டை தொங்கவிடப்பட்டுள்ளது. குறித்த வீதியில் ஆட்களற்ற காணிகளின் இருமருங்கும் பற்றைகள், புதர்கள் காணப்படுகின்றன.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இந்த வீதியால் செல்லும் பெண்களின் தாலிக்கொடி, சங்கிலியை அறுத்துக்கொண்டு திருடர்கள் தப்பியோடுவது நெடுநாளாகத் தொடர்கிறது. இந்த நிலையில் பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் திருடர்களிடம் இருந்து தப்பிக்க எச்சரிக்கை சுலோகங்கள் எழுதப்பட்டு வீதியில் தொங்கவிடப்பட்டுள்ளது.

# அனுமதியற்ற கொல்கள நடைமுறையால் கைது

## வெட்டிய இறைச்சியும், உயிருடன் மாடும் மீட்பு

சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக மாட்டை வெட்டிய இருவர் கைதுசெய்யப்பட்டதுடன், 2 மாடுகளும் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து யாழ். ஐந்து சந்திப் பகுதியில் இவ்வாறு சட்டவிரோதமாக அனுமதி பெறப்படாது ஒரு மாடு வெட்டப்பட்டுள்ளது.

இதன் 33 கிலோ இறைச்சியை பொலிஸார் மீட்டதுடன், மன்னார், பொம்மைவெளிப் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். இறைச்சிக்காக வெட்டுவதற்கு கொண்டுவரப்பட்ட இரு மாடுகளும் மீட்கப்பட்டுள்ளன. இது குறித்து யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ,25)

# தூக்குத் தண்டனை மீனவர் விவகாரம் இன்று டில்லியில் பேச்சு

மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிப்பது குறித்து, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை, தமிழக மீனவ சங்கங்களை சேர்ந்த பிரதிநிதிகள் இன்று டில்லியில் சந்தித்து பேசவுள்ளனர்.

டில்லியில் நடைபெற உள்ள சுஷ்மா சுவராஜ் உடனான பேச்சுவார்த்தையில் பங்கேற்க தமிழகத்தில் இருந்து 15 மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று டில்லி புறப்பட்டு செலகின்றனர்.

இன்று காலை 11 மணியளவில் டில்லியில் வெளிவவகார அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

அப்போது மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், சுமூகமான முறையில் மீன்பிடிக்க தேவையான நடவடிக்கைகள் குறித்து மீனவ சங்கங்கள் பிரதிநிதிகள் வெளிவவகார அமைச்சரிடம் ·கூறவுள்ளதுடன் இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்களை விடுவிப்பது குறித்தும் பேசவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டில்லி செல்லும் மீனவ பிரதிநிதிகளுடன் மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணனும் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மகிந்தோதய...

இன்று இந்த தேசிய நிகழ்வு இடம்பெறும்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் ஆலோசனையின் பேரிலேயே இந்த நிதியம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொள்வர்.

### புலிகளை...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

தாமரைத் தடாகம் மகிந்த ராஜபக்ஷ மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மனிதாபிமான நடவடிக்கையின் போது அந்நடவடிக்கைகளை பொதுமக்கள் தெரிந்துகொள்ள ஊடகம் பல்வேறு வகையில் பங்களிப்பு வழங்கியது. எனினும் அச்சந்தர்ப்பத்திற்கு கடற்படை எவ்வாறு முகம் கொடுத்தது என்பதை மக்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் விசேட விதமாக மாணவ மாணவிகளுக்கும் சவால்களுக்கு எவ்வர்று முகம் கொடுப்பது என்பது தொடர்பில் அறிவை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

### புலிகளின்...

கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்த விசாரணைகள், தொடர்ச்சியாக இடைவிடாமல் முன்னெடுக்கப்படும் என சுவிட்சர்லாந்து சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இந்த சம்பவம் குறித்த மேலதிக தகவல்களை வெளிப்படுத்த முடியாது என சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும். செல்வாசுக் நிறுவனத்திற்கும் புலிகளின் கொடுககல் வாங்கல்களுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது. அதேவேளை, ஜெனிவாவிற்கான இலங்கை தூதரக புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட செல்வாசுக் நிறுவனத்திற்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்பு காணப்படுவதாக சில ஊடகங்களில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

### தேர்தல்...

பதவிக்கான நான்கு வருடங்கள் நாளை 19 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றமையால் அன்றைய தினமே வர்த்தமான அறிவித்தல் வெளியிட அரசு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.


அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 2712 உள்ளூராட்சி உறுப்பினர்களின் ஒத்திசைவு கொழும்புக்கு அழைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. இன்னும் 48 மணி நேரத்தில் தேர்தல் தொடர்பான முழு அறிவிப்பும் வரலாம் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் முடிவில் இரண்டாம் முறை வாக்கு எண்ணும் நடவடிக்கை இடம்பெறமாட்டாது.

முதல் தடவையிலேயே ஜனாதிபதி தேவையான சதவீதத்தை பெற்றுவிடுவார் என முழுமையாக நம்பப்படுவதாக ஐ.ம.சு.முன்னணியின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

# 25 மாவட்டங்களினதும் தனித்துவம் ரூ.10 நாணயக்குற்றி மூலம் பிரதிபலிப்பு

## ஜனாதிபதியிடம் கையளித்து வெளியிடப்பட்டது



(கொழும்பு)

இலங்கையின் 25 நிருவாக மாவட்டங்களையும் சித்தரிக்கும் புதிய ரூ.10 நாணயக்குற்றிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை மத்திய வங்கி யின் தலைமையகத்தில் நடை பெற்றது.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்த புதிய நாணயக்குற்றிகளை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இலங்கையிலுள்ள ஒவ் வொரு நிருவாக மாவட்டத்தின தும் தனித்துவம் வாய்ந்த பண் புகளை முக்கியத்துவம் மிக்க அடையாளங்களையும் சிறப்புப் பண்புகளை அங்கீகரித்து அவற் றினை விபரணப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி 10 ரூபா நாணயக்குத்தி களைக் கொண்ட புதிய தொட ரொன்றினை வெளியிட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உட்பட பிர முகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.


# தலைமைப்பொறுப்பில் இருந்து ராஜினாமா

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத் துரலிய ரத்தின தேரர் திவுலுப் பிட்டிய அபிவிருத்தி குழுவின் தலைமைப்பொறுப்பிலிருந்து நேற்று ராஜினாமா செய்துள் ளார்.

தனக்கு வழங்கப்பட்ட அரச வாகனத்தையும் ஒப்படைத் துள்ள அவர் நாடாளுமன்றத்தில் தனியாக செயற்படப்போவதாக தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு மாற்றங்கள் தொடர்பாக தனது கட்சி முன் வைத்த நிபந்தனைகள் பல வற்றை அரசாங்கம் நிராகரித் துள்ளதாக தேரர் ஏமாற்றம் தெரிவித்துள்ளார்.



தேர்தலுக்கு முன்னதாக அரசமைப்பு மாற்றங்களை முன் னெடுக்காவிட்டால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை தோற் கடிப்பேன் என அவர் தெரி வித்துவருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# யாழ்.நகரம் விரைவில் புதுப்பொலிவுடன் காட்சிதரும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர குளத்தை புனரமைத்து அதனை அழகுபடுத் திப்பராமரிப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

குளம் அமைந்துள்ள பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அதன் புனரமைப்பு தொடர்பில் ஆராய்ந்தார். யாழ்ப்பாண நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள இக்குளம் நீண்டகாலமாக புனர மைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.இதனையடுத்து நக ரத்தை அழகுபடுத்தும் வகையில் அதனை பாதுகாத்து பராமரிக்கும் வகையில் செயற்திட்டங்கள் தொடர்பில் துறைசார்ந்தோரிடம் கேட் டறிந்து கொண்டார்.

கஸ்தூரியார் வீதியில் மாநகர சபையால் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட கட்டடத் தொகுதிக்குப் பின்புறமாகவுள்ள இக்குளத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைவாக புனரமைப்பதனூடாகவும் அதனைப் பாதுகாக்கும் வகையில் முன் னெடுக்கப்படவுள்ள செயற்திட்டங்கள்ஊடாகவும் யாழ்ப்பாண நகரம் எதிர்காலத்தில் புதுப்பொலிவுடனும் அழகுடனும் காட்சிதரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதிவாளர் மாநாடு இன்று

இலங்கையின் இயற்கை வனப்பு மற்றும் விருந்து உபசரிப்பை முழு உலகத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் தொழில்சார் வலைத்தள பதிவாளர் சங்கத்தினருடன் இணைந்து ஸ்ரீலங்கா எயார லைன்ஸ் விமான நிறுவனம் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வலைத்தள பதிவாளர்களின் முதலாது ஆசிய மாநாட்டில் கலந்து கொள்ள வலைத்தள பதிவாளர்கள் இலங்கை வந்துள்ளனர். 46 வலைத்தள பதிவாளர்கள் இலங்கை வந்துள்ளதுடன் மாநாடு இன்று ஆரம் பமாக உள்ளது.

# மகிந்தவுக்கே ஆதரவு திஸ்ஸ விதாரண அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் மகிந்த ராஜபக்சவுக்கே முழுமையான ஆதரவை வழங் குவதற்கு லங்கா சமசமாஜ கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச் சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநா ட்டின் போதே அமைச்சர் இத னைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு எமது கட்சி தீர்மானித்துள்ளது.

இந்த அரசாங்கத்தில் பல குறைபாடுகள் உள்ளன என் பதை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் நாட்டை முன்னேற்ற பாதையில் இந்த அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது.

எனவே ஜனாதிபதிக்கே எமது ஆதரவை வழங்குகின் றோம். நாட்டில் ஊழல் மோசடி கள் குறித்து பேசப்படுகின்றது. செல்வந்த தரப்புக்களுடன் இணைந்து அபிவிருத்தி செயற் பாடுகளை முன்னெடுக்கும் போது ஊழல் மிகுந்த நிலைமை உருவாக சாத்தியம் உள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா



மற்றும் இந்தியாவிலும் இந்த நிலைமையை நாம் காணுகின் றோம்.

அதனால் தான் பழமையான கட்சியான காங்கிரஸ் கட்சி கடந்த தேர்தலில் தூக்கியெறிப் பட்டது.

இந்நாட்டின் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து அபி விருத்தியை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்தவினால் மாத்திரமே முடியும்.

எனவே அவரை மீண்டும் கொண்டுவர ஒத்துழைப்பு வழங்குவோம். எதிரணி, நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மையை நீக்க வேண்டும் என கூறுகின்றது.

ஆனால் அவர்களிடம் அதற் கான உண்மையான நோக்கம் இருப்பதாக தெரியவில்லை. அதனால் மக்கள் மத்தியில் பொது வேட்பாளர் தொடர்பில் நம்பிக்கையற்ற தன்மை ஏற்பட் டுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# ராஜபக்ஷவிற்கு ஆசிவேண்டி பெத்லஹேமில் திருப்பலி பூசை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவின் 69 ஆவது பிறந்த தினத் திற்கு ஆசிவேண்டி எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 3 மணி க்கு பெத்லஹேம் நேட்டிவிட்டி தேவாலயத்தில் திருப்பலி ஒப்பு கொடுக்கப்படவுள்ளது.

பெத்லஹேமிலுள்ள இல ங்கை நண்பர்கள் என்ற பால ஸ்தீன அமைப்பு இஸ்ரேலில் உள்ள தூதரகம் மற்றும் பால ஸ்தீன பிரதிநிதித்துவ அலு வலகம் என்பன இலங்கை தூத ரகத்துடன் இணைந்து இந்த திருப்பலியை ஏற்பாடு செய்துள் ளது.

பாலஸ்தீன உல்லாசப் பிர யாணத்துறை அமைச்சர் பெத்ல ஹேம் ஆளுநர் மற்றும் நகர பிதா ஆகியோர் இத்திருப் பலியில் கலந்துகொள்ளவுள் ளனர்.

உயர்ஸ்தானிகர் சரத் விஜே சிங்க தூதரக ஊழியர்கள் பிர திநிதித்துவ அலுவலக அதி காரிகள் டெல் அவி ஜெருச லேம் ஆகிய இடங்களில் பணி யாற்றும் இலங்கையர்கள் இத் திருப்பலியில் கலந்துகொள்ள வுள்ளனர்.

பாலஸ்தீன பிரதிநிதித்துவ அலுவலகம் 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதையடுத்து ஒவ் வொரு வருடமும் ஜனாதிபதி யின் பிறந்த தினத்திற்கு பெத் லஹேமில் கொண்டாடப்பட்டு வருகின்றமைக் குறிப்பிடத்தக் கது.

பிரதிநிதித்துவ அலுவலகத் தின் முன்பாக அமைந்துள்ள பாதைக்கு மஹிந்த ராஜபக்ஷ என 2007 ஆம் ஆண்டு பெயரி டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நவக்கிரி கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தோட்டக்கிணற்றிலிருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட் கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

புத்தூர் மேற்கு நவக்கிரியைச் சேர்ந்த சின்னையா மகாதேவி (வயது - 65) என்ற மனநோயினால் பீடிக்கப்பட்ட வயோதிபப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இவர் கிணற்றில் வீழ்ந்துள்ளதாகவும், நேற்றே அயலவர்கள் கிணற்றில் சடலம் இருப்பது குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையதுடன், அச்சுவேலி பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுவருகின்றனர். மரண விசாரணையின் பின்னர் நேற்று மாலை சடலம் உறவினர் களிடம் ஒப்படைக்க ஏற்பாடாகி யிருந்தது. (இ,25)

# யாழ். குடாவில் மீண்டும் கஞ்சா

(யாழ்ப்பாணம்)

கஞ்சாப் பொதிகளை விற்ற நபர் ஒருவரை யாழ். பொலி ஸார் துண்டிப் பகுதியில் நேற்று கைதுசெய்தனர்.

நேற்று நண்பகல் வேளை யில் 1500 ரூபாவுக்கு 3 பொட் டலங்களை விற்பனை செய்ய முற்பட்ட வேளையிலேயே யாழ்.பொலிஸார் பிரஸ்தாப நபரை கையும் களவுமாக கைது செய்துள்ளனர்.

இக்கஞ்சா பொதிகள் விற் பனைக்காக எங்கிருந்து பெறப் பட்டது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (இ,25)

# யாழில் கிட்டார் பயிற்சி எதிர்வரும் 29 ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிட்டார் சங்கத்தின் ஏற்பாட்டில் கிட்டார் இசைக்கருவிப பயிற்சி பெறவிரும்புவோருக்கு உரிய பயிற்சிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயிற்சி பெறும் இசைக்கலைஞர்கள் தேசிய மற் றும் சர்வதேச மட்ட நிகழ்வுகளில் இணைத்துக் கொள்ளப்படவுள் ளனர். ஏற்கனவே கிட்டார் பயிற்சி பெற்றவர்களும் இத்திட்டத்தில் இணைந்துகொள்ளமுடியும் .

இப்பயிற்சிக்கென கலைஞர்கள் தெரிவு எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும். இதில் இணைந்துகொள்ளவிரும்புவோர் 077 7707332 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.